தெணியான்

# எழில்



## கிறிஸ்மஸ்
## சிறப்பிதழ்



கலைத்தாயின் புதல்வர்களாகிய எமக்கு

ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும்

பெரியோர்கள், நண்பர்கள், சகோதரிகள்

அனைவருக்கும் எமது மனமார்ந்த

**நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்**

**யாழ். நவரச நாடகாலயம்**
**யாழ்ப்பாணம்.**

**விரைவில் எதிர்பாருங்கள்!**

ஈழத்தின் முதல் படைப்பாய்
பிரமாண்டமான தயாரிப்பாய்

**யாழ். நவரச நாடகாலயம்**

அளிக்கும்

# "சிலம்பு"

**(மூவர்ண இசை நாடகம்)**

**Technic Colour Drama**

உங்கள் அன்பிருக்கும் வரை
எங்கள் வளர்ச்சியின் உயர்ச்சியில்
பெரும் மகிழ்ச்சி

தெணியான்

"தெணியான்"

# அஞ்சலி



பூமுகம் களிகொள்ளும் பொன்னாளில், சாந்தியும் அமைதியும் தவழும் இன்னாளில், அன்பு பூத்துப் பரிமளிக்கும் நன்னாளில், நல்லுள்ளம் படைத்தவர்க்குச் சமாதானம் பெருகும் நத்தார்த்திருநாளில் எங்கள் எழிற் சிறப்பிதழ் மலர்கிறது.

## இந்த அன்பின் தினத்தில்......

அன்பர்கள் ஆதரவாளர்கள் எழுத்தாளர்கள் சந்தாதாரர்கள் விளம்பரம் நல்கிய பெருந்தகையாளர் அச்சகத்தார் அனைவரையும் நினைவுகூருகின்றோம்.

## கைதந்து எழில்காத்த தமிழ்ச் செல்வர்காள்
## உதிக்கும் புதுவருடம்......

தங்கள் வாழ்வு மலர, வளம் செழிக்க
கையிடும் கருமங்கள் நனிசித்தியுற
இதய மலர்வுடன் வாழ்த்துகின்றோம்.

கடந்தகால நினைவாய் எம் உள்ளத்திற் பெருகும் நன்றியுணர்வைக் காணிக்கையாக அர்ப்பணிக்கின்றோம். எதிர்காலத்தும் இருகரம் தந்து வரவேற்குமாறு பணிவுடன் வேண்டி,

**இனியத் திருநாள் சுபசோபனமும்**
**புத்தாண்டு வந்தனமும்**
**இயம்பி நிற்கின்றோம்.**

— ஆசிரியர்.

# FOR ALL AGRICULTURAL PROJECTS

specify....



LISTER DIESEL
GENERATING SETS



LISTER DIESEL
PUMP SETS



WINGET DIESEL TRACTOR
& IMPLEMENTS



WEATHERILL
DIESEL/HYDRAULIC LOADERS



DIESEL
WELDING PLANT




LISTER DIESEL ELEVATORS
& LOADERS

***Put Diesel power to work for you & earn more profits***

consult the specialists

## HARRISONS LISTER ENGINEERING LTD.

HLE

MORGAN ROAD COLOMBO 2 GRAMS HARRILIST

''இரங்கு நிலைகொண்ட தமிழ் ஏற்றகுறை
தவிர்த்திட நீர் எழுச்சி கொள்வீர்''

# எழில்

கவின் 2 | டிசெம்பர்—ஜனுவரி 1970 | காட்சி 6, 7

ஆசிரியர்:
**மனு. அரியநாயகம்.**

●

இருதிங்கள் வெளியீடு

●

அலுவலகம்:
''எழில்''
99, மாதம்பிட்டியா வீதி,
முகத்துவாரம்,
கொழும்பு 15.

●

கிளை:
97/7, பீச்றோட்,
யாழ்ப்பாணம்.

---

எழிலில் வெளிவரும் கதைகள் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவரும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

—ஆசிரியர்.

## இந்த இதழில்...

○ அஞ்சலி
○ பணிந்திடுவோம்
○ என் இதயத்தில் இடம் பெற்ற இயேசு
○ வாழ்வைத் தேடி
○ விடியுமா?
○ இசைமாலை 3
○ மாவிட்டபுரத்திலா முருகனை வணங்கப் போகின்றீர்கள்
○ தமிழரசி—நாடகம்
○ மன்னிக்க வேண்டுகிறேன்
○ அவளுக்குத் திருமணமாம்
○ யார் அழைத்தார்? ஏன் வந்தீர்?
○ வந்து குவியும் வாசகர் கடிதங்கள்
○ கடைசிநாள் மன்னிப்பு
○ எண்ணம்

# பணிந்திடுவோம்

1

ஈனப்புவிதனில் வாழ்வுற் றுயர்ந்திட
எண்ணங் கனிந்தவனை
வானத் திருநகர்த் தூதர் துதித்திட
வையத் துதித்தவனை
ஞானக் கொழுந்தினை ஞாலத் துயிர்தனை
நந்தவப் பேரமுதைத்
தேனைத் தருமொழித் தாயின் குமரனைத்
தேடிப் பணிந்திடுவோம்.

2

ஆவின் குடிலணை மூடுங்குளிரிடை
அன்பு சொரிந்தவனைப்
பூவிற் புரவலர் மேவித் தொழுதிடப்
பூத்தநற் பூமதியை
ஏவையவள்தரு தீவினை போக்கிடும்
எங்களுயிர்த் துணையைச்
சீவிய கற்பகச் செல்வத் தருவினைச்
சென்று பணிந்திடுவோம்.

3

கன்னிக் கனியினைக் கன்னற் சுவையினைக்
காவியத் தீஞ்சுனையைப்
பொன்னைச் சொரிந்தருட் புன்னகை மின்னிடும்
பூரண வெண்ணிலவை
இன்னுயிர் தந்தெமை ஏந்திப் புரந்திட
இவ்வுல குற்றவனைப்
பன்னரும் பைந்தமிழ்ப் பாலக யேசுவைப்
பாதம் பணிந்திடுவோம்.

யாழ். "ஜெயம்"

# என் இதயத்தில் இடம்பெற்ற இயேசு

"ஈழவேந்தன்"

## நாற்பெரும் சமயங்கள் நானிலத்தை ஆள்கின்றன

இந்நானிலத்தை நாற்பெரும் சமயங்கள் ஆளுகின்றன; அவை யாவன: இந்து, புத்த, இசுலாமிய, கிறித்தவ மதங்களாகும். இவற்றுள் இந்துசமயம் தனியொருவரின் சிந்தனையினுலேயோ, வழிகாட்டிய தன்மையினுலேயோ உருவாகாது வரலாற்றுக்காலத்திற்கு முன்பேயே தோன்றிய பல கொள்கைகளின் கூட்டுறவால் வளர்ந்து பரந்து விளங்குகிறது. பின்னே குறிக்கப்பட்ட புத்தமும், இசுலாமியமும், கிறித்தவமும் தனி மானிடரின் சிந்தனையால் செயற்கரிய செயல்களால் ஆட்கொள்ளப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்ட நெறிகளாய் (சமயங்களாய்) விளங்குகின்றன. இவற்றுள் புத்த நெறி "சமயம்" என்ற வரையறைக்குள் அடங்குமா, அல்லது மெய்விளக்கம் (தத்துவம்) என்ற நிலையில் மட்டும்தானு அதனை யாம் ஏற்க வேண்டுமென்பது ஐயத்திற்குரிய கேள்வியெனினும் அதனின் விரிவு-தனி ஆய்வு ஈண்டு இக்கட்டுரைக்குத் தேவையில்லை.

## எண்ணிக்கையில் ஏற்றம் பெறுகின்ற கிறித்தவம்

இன்று உலகில் நிலவும் சமயங்களைத் தழுவி நிற்கும் மக்களை, எண்ணிக்கை அடிப்படையில் வைத்து ஆராயும்போது கிறிஸ்



தவ நெறி 76,30,00,000 மக்களை தன்னுள் அடக்கி முதன்மை யிடம் பெறுகிறது. இதனை அடுத்து இசுலாம் 37,30,00,000 மக்களையும், புத்தம் 34,30,00,000 மக்களையும், இந்துமதம் 31,00,00,000 மக்களையும் தம் முள் அடக்கி வாழ்கின்றன. உல கில் மிகப் பெரும்பான்மை மக் கள் கிறிஸ்தவ நெறியைச் சார்ந் துள்ளார்கள் என்று கூறும்போ தும் கிறித்தவ நெறியில் உள் ளோர் அனைவரும் கிறிஸ்துவின் அன்பு வழியினுல் ஆட்கொள்ளப் பட்டவர்களா? அல்லது இவர் களை ஆண்ட இனங்களால் மத மாற்றம் செய்யப்பட்டார்களா என்ற கேள்வி எழும்போது மத மாற்றம் மனமாற்ற அடிப்படை யிலும் ஏற்றப்பட்டதுண்டு; அத் தோடு ஆண்ட இனங்களின் ஆட் சிக்கு அடங்கி மதம் மாறியோ ரும் உண்டு என்பதை வரலாற்று அடிப்படையில் யாம் ஏற்றேயாக வேண்டும்.

## இம்மண்ணுலகில் இயேசு ஏன் தோன்றினர்?

"காலத்திற்குக் காலம் காலத் தால் சாகாது ஞாலத்தில் என் றும் நிலைத்து நிற்கும் நல்ல பணி யைச் சான்றோர் ஆற்றுவர்" என்று திரு. வி. க. அடிக்கடி கூறுவதுண்டு. இதற்கமைய, பகவத்கீதையில் பரந்தாமனும், "உலகில் தீமைகள் மலிந்து நன் மைகள் நலிவுறும்போது யான் உலகில் தோன்றித் தீமைகளை அழித்து, நல்லனவற்றை நிலை நாட்டுவேன்" என்று கூறியுள் ளார். ஏறக்குறைய இதே கருத் தைத்தான் கிறித்து பெருமா னும் தனது விவிலிய நூலில், "வறியோர்க்கு நற்செய்தி (சுவி சேஷம்) உரைக்கக் கடவுள் என்னை ஏற்படுத்தினர். சிறைப் பட்டோருக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் நல்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உயர்வு கொடுக்கவும், ஆண்டவ னது அருள் விளங்கும் காலத்தை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினர்" என மொழிந் துள்ளார்.

## ஆத்மீகத்தின் பிறப்பிடம் எது?

பஞ்சபூதக்கலைகள் மேற்கே மெத்தவளர்வது உண்மையெனி னும் ஆன்மீகக் கலைகள் யாவும் கிழைத்தேய நாடுகளிலேயே வளர்ந்துள்ளன. புவிக்குப் புது வழிகாட்டிய புத்தர் சரி, மானிட சமுதாயத்திற்குச் சகோதரத்து வத்தை வலியுறுத்திய முகமது நபி சரி, மாநிலத்தை வாழ்வித்த மகாத்மா சரி, கீழ்நாடுகள் தோற்றுவித்த பெரியார்களா கவே காட்சியளிக்கிருர்கள். அதுபோல் எம் யேசுக்கிறித்து வும் கீழைத்தேயமாகிய பலஸ்தீ னில் 1970-ம் ஆண்டுகட்குமுன் யூதர் குலத்தில் சூசையப்பருக் கும், "கருவில்லாக் கருத்தாங் கிய மரியாயிக்கும்" மகவாகத் தோன்றினர்.

## அவர் வாழ்வின் முற்பகுதி

அவர் சிறப்பு வாழ்வுபற்றிய குறிப்புகள் அனைத்தும் ஈண்டு தேவையில்லையெனினும் அவர் பணியின்பாங்கினை அறியஅன்னாரின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை ஈண்டு நினைவு கூர்தல் பொருத்தமுடைத்து. இயேசு அவர்கள் பன்னிரண்டாம் வயதில் இருக்கும்போது பெற்றோரால் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அன்றே அவர் தன் பெற்றோருக்குத் தெரியாமல் அங்கிருந்த கற்றறிந்த மூதறிஞர்களுடன் வியப்பூட்டும் முறையில் ஆழ்ந்த கருத்தோடு உரையாடல் நிகழ்த்தினர். பின்பு, பெற்றோருடன் வீடு திரும்பிய இயேசு வெளியுலகத் தொடர்பற்றுத் தனது முப்பதாம் வயதுவரை தந்தைக்குத் துணையாய் இருந்து வீட்டிலே பணியாற்றினர்.

## முடிவிலாது நிலைத்துநிற்கும் மூன்றுண்டுப் பலி

உலக வரலாற்றில் இயேசுக் கிறித்துவின் வாழ்வும், பணியும் தனியிடம் பெறுகின்றன. எனினும் அவரின் பணி அவரின் முப்பதாம் ஆண்டில் தொடங்கி முப்பத்துமூன்றில் முடிவுற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின் இயேசுக்கிறித்து உலகில் வாழ்ந்த காலம் 33 ஆண்டுகள். அதிசயங்கள் (Miracles) பல செய்து ஆண்டவனின் அருளை வேண்டி மக்களுக்கு உவமை நயத்தோடு அறிவுரை வழங்கிய காலம், அவரின் மூன்றுண்டு இறுதிக்காலமே. தென்னகத்தில் தோன்றிய பல சமயச் சான்றோரின் வரலாற்றை ஆராயும்போது கூட அவர்கள் உலகில் வாழ்ந்த காலம் மிகக் குறுகியதாகவே விளங்குகிறதைக் காண்கிறோம். மிகக் கர்மதிப்படைத்த சங்கரர் வாழ்ந்த காலம் 33 ஆண்டுகளே. தெவிட்டாத தேன் கலந்த வாசகம் தந்த மணிவாசகர் வாழ்வு முப்பத்திரண்டோடு முடிவுற்றது. நாளும் நற்றமிழ்ப்பாடிய ஞானசம்பந்தர் வாழ்வு பதினைறைத் தாண்ட மறுத்தது. அதுபோல் தம்பிரான் தோழர் சுந்தரர் வாழ்வும் பதினெட்டோடு நிறைவெய்தியது. இவர்கள் வாழ்வு எமக்கு எடுத்துரைக்கும் பேருண்மையென்ன? யாம் இவ்வுலகில் எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பதல்ல முக்கியம். யாம் எப்படி வாழ்கிறோம் என்பதே முக்கியம்.

## மலைமொழியின் மாண்பு

இயேசுவின் வாழ்வும், பணியும் புதிய ஏற்பாட்டில் (New Testament) புத்தொளி வீசியபடி விளங்குகின்றன. உவமைச் செறிவுடன் அவர் வழங்கிய அறிவுரைகள் (ஞானோபதேசம்) ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் தன்மை வாய்ந்தவை. அவ்வறிவுரைகள் முழுவதையும் ஈண்டு எடுத்து விளக்குதல் எளிதல்ல. ஆதலால், அவ் அறிவுரைகளின் சிகரம் எனக் கருதப்படும் மலைமொழி (Sermon on the

# "எழில்"

## புதிய ஆண்டு சந்தா ரூ. 3 மட்டுமே!

**இதழுக்கு இதழ் புதுமை பெற்று வாசகர்களின் தொகையை அதிகரித்துவரும் எழிலுக்கு இன்றே நீங்களும் உங்கள் நண்பரும் சந்தாதாரராகுங்கள்.**

**உங்கள் அன்பிருக்கும்வரை 'எழில்' நங்கை தன் இலக்கிய வளர்ச்சியில் உயர்ச்சி கொள்வார்.**

## எழில்

**ரூபா 3 அனுப்பிவையுங்கள். எழில் நங்கை இரு திங்கள் தோறும் உங்கள் இல்லங்களை வந்தடைவாள்.**

*அனுப்பவேண்டிய முகவரி:*

**நிர்வாகி 'எழில்',**
*99, மாதம்பிட்டியா வீதி,*
*கொழும்பு 15.*






எங்கள் வாடிக்கையாளர்கள்,

அன்பர்கள், ஆதரவாளர்கள்

அனைவருக்கும்

**நத்தாரின் சோபனமும்,**

**புத்தாண்டு வாழ்த்தும் உரித்தாகுக.**

Mount) என்ற பகுதியில் இருந்து மட்டும் சில சிந்தனைத் துளிகளை ஈண்டு எடுத்துப்பெய்வாம். அன்னார் கருத்துக்களை எடுத்து இயம்பும்போது அவை எவ்வளவு தூரம் எம் தமிழ் அறிஞர்கள் கருத்துக்களோடு ஒத்திருக்கின்றனவென்பதையும் ஒப்பிட்டுக் காட்டுதல் இக்கட்டுரையாளரின் நோக்கு. இயேசுவிற்கு இறைவன் இடத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த இறைவனை அடைய எமக்குத் தேவையான முதற்பண்பு உள்ளத்தூய்மையே. உள்ளத்தூய்மையற்ற வெறும் ஆரவாரம் எவ்வித பயனையும் தராது என்று இயேசு இயம்புகிறார். இதையும் திரு. வி. க. அவர்கள் தனது கிறிஸ்து மொழிக்குறள் என்ற நூலில் "அகத்தில் லழுக்கில்லா அறவோர்கள் வாழி - இகத்திலுங் காண்பர் இறை" என இன்பத் தமிழில் வடித்துத் தருகிறார். இந்த உண்மையைத்தான், "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம் நெறிநின்றார் நீடுவாழ்வார்" என்றும் மனத்துக்கண் மாசிலன்ஆதல்அனைத்து அறன் ஆகுல நீர்பிற" என்றும் வள்ளுவர் தன் குறளில் ஐம்புலன் அடக்கமும், மாசற்ற மனமும் அறத்தோடு இயைந்த இறைவாழ்விற்கு மிகத்தேவையென வலியுறுத்துவதைக் காண்கிறோம்.

## இயேசுவின் மறைமொழிகள்

இயேசுக்கிறித்து அவர்கள் பிறிதோர் இடத்தில் "முன்னை மொழிவிதிகளோடு தான் மோத வரவில்லையென்றும், மாறாக அவற்றை நிறைவேற்றவே தான் வந்துள்ளேன்" என்றும் கூறுகிறார். அவ்விதம் கூறியவர் உலகில் என்றும் அழியாத மறைமொழிகளை வழங்கியுள்ளார். இந்தப் பேருண்மையை நம் வள்ளுவப் பெருந்தகை "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும் என்று உறுதி கூறுகிறார்.

இயேசு அவர்கள் அடிக்கடி வலியுறுத்திய கருத்துக்கள் பாவிகளை மன்னியுங்கள்; தீமை செய்தோருக்கும் நன்மை செய்யுங்கள், பொறுமையைக் கடைப்பிடியுங்கள். அப்பொழுதுதான் இறையருள் உங்களுக்குக் கிட்டும் என்பதே. இக்கருத்துக் கருவூலத்தை நம் மணவழகனார் (திரு. வி. க.) தனது "கிறிஸ்து மொழிக் குறள் என்ற நூலில் பின்வருமாறு மூலக்கருத்து சிதைவுறாது செந்தமிழில் செப்புகிறார். அவற்றுள் சில இங்கே தரப்படுகின்றன.

"பல்லுக்குப் பல்லென்றும், கண்ணுக்குக் கண்ணென்றும் சொல்வதைக் கேட்டிருப்பீர் தும்பு"

தீமைக்கெதிர்ப்பளித்தல் தியதே என்பன்யான் தீமைக்குத் தீமையே தீது

ஒருவனொரு கன்னத்தில் ஓங்கி அறைந்தால் மறுகன்னம் காட்டி மகிழ்

ஒருவனொரு போர்வைக் குழன்று வழக்கிட்டால் தருக அதை அங்கியுடன் தாழ்ந்து

நேசி அயலவனை நேர்ந்த பகைவனைக் கூசிவெறு என்பது முன் கூற்று

என்மொழியைக் கேளுங்கள் எங்குமுள இறைவன் அன்பொன் றறிகவே ஆய்ந்து

மாற்றாரை நேசியுங்கள் வாழ்த்துங்கள் சூழவரப் போற்றார்க் கும் ஆற்றுங்கள் போற்றி

மிக்க அபாண்டம் விளம்பி, வதைப்போர்க்கும் தக்க செபஞ் செய்யுங்கள் சார்ந்து

அப்பொழுதே மேலுலக அப்பனுக்குண்மைச்சேய் இப்புவியில் ஆவிர் இயைந்து

## வள்ளுவரின் வாய்மொழி

இயேசுவின் இவ்வரிய கருத்துக்கள் நம் வள்ளுவர் வாய்மொழியில் பின்வருமாறு வழிந்தோடுகின்றன. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்", "இன்னா செய்தார்க்கு இனியவே செய்யாக்கால் என்னபயத்ததோ சால்பு", வாழ்ந்த காலத்தாலும், பிறந்த இனத்தினாலும் பேசிய மொழியினாலும் இவர்கள் மாறுபட்டாலும் இவர்களின் எண்ணத்தின் ஏற்றத்தில் உள்ள ஒருமைப்பாட்டைக் கண்டு எம் உள்ளம் உவகையுறுகிறது.

## கொடுமைகண்டு கொதித்தெழும் குணக்குன்று

"குணம் எனும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது என்றும் "சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும்கீழ்" என்றும் தம் குறட்பாக்கள் மூலம் நம் செந்நாப்போதார் குணம் எனும் குன்றேறி நின்றார்கூட தாங்கொணாக் கொடுமையைக் காணும் போது கொதித்தெழுவர் என்பதையும் சொல்லப்பயன்படாத கயவரை கரும்பைப் பிழிவது போல் பிழிந்தாற்றான் பயன் படுத்தலாம் என்பதையும் இடித்துரைக்கின்றார். இரக்கத்தின் உருவாய் பொறுமையின் பிறப்பிடமாய் விளங்கிய எம் இயேசு கூட இறைவன் கோயில் கயவர் கூட்டம் கூடி கோயிலின் தூய்மையைக் கெடுக்க முயன்ற போது வெகுண்டெழுந்து வன் சொற்கள் கையாண்டு தடி கொண்டு அடித்துத் துரத்தினார். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்ற கூற்றிற்கு இந்நிகழ்ச்சி ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

## ஊர் போற்றவில்லை உலகம் போற்றுகிறது

சுருங்கக் கூறின் அருளின் வடிவமான இயேசு தீயோரை தீய வழிகளில் இருந்துமீட்டு வானுலக ஆட்சியை—வானப்பர் ஆட்சியை இம்மண்ணுலகில் நிலை நாட்ட விழைந்தார். உலகெங்கணும் அனுப்பும் அருளும் அமையும் இன்பமும் இணைந்து வாழ அருள்மொழிகளை அறிவோடு குழைத்து உள்ளக் குழைவோடு மக்களுக்கு ஊட்டினார். ஆனால், அவர் தம் விவிலிய

நூலில் ஓர் இடத்தில் ''ஒரு தீர்க்கதரிசிக்கு உலகில் புகழ் உண்டு ஆனால், தன் நாட்டில் மதிப்பில்லை (A Prophet is not without honour except in his own country) என விளம்பியதற்கமைய அவர் பிறந்த நாட்டிலேயே தான் தோன்றிய இனத்தவராலும் தன் நாட்டை ஆண்ட அரசனுலும் ஏதோ கூறத்தகாதவை கூறிய கொடுமையாளன் என்ற பேரில் சிலுவையில் அறைந்து சித்திரைவதை செய்யப்பட்டார்.

## பொறுமையின் பிறப்பிடம்

ஆனல், எம் ஏந்தல் இயேசுவோ ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல்தலை'' என வள்ளுவர் வரைந்தமைக்கமைய இரக்கமற்ற அரக்கமனம் படைத்தோர் இவருக்கு இத்தகைய தாங்கொணுத் துயரை விளைவித்தபோதும் அவர் தன் நிலையில் இருந்து பிறழவில்லை. மண்ணிலே மாந்தர் செய்யும் மாபாவம் போக்க வந்த இந்தமானிடத் தெய்வம் இறுதியில் மொழிந்த மொழிகள் கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யும் தன்மை வாய்ந்தன. இவரின் இந்த இரக்க சிந்தையை வன்னத் தமிழில் வளமான கருத்தோடு உள்ளத்தை ஊடுருவும்முறையில் உணர்த்துகிருர் கிருஷ்ணபிள்ளை என்ற கிறித்தவக் கவிஞர். இதோ அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்ச்சிப் பெருக்கு:

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி
பன்னரிய பலபாடுபடும் போதும் பரிந்''தெந்தாய்
இன்னதென அறிகில்லாதார் செய்வதிப் பிழையை மன்னியும்''

என்றெழிற் கனிவாய் மலர்ந்தார் நம் அருள் வள்ளல்.

## கிறித்து இவ்வுலகின் பொதுவுடைமை

இன்று இயேசுக்கிறித்துப் பெருமானை ஒரு சமயம் சார்ந்தோரே வழிபடு தெய்வமாகக் கொள்கின்றனர். எனினும் அப்பெருமகனை ஒரு குறுகிய மத எல்லைக்குள் அடக்குவது தவறு. அவர் வாழ்ந்த வாழ்வு — தன் கொள்கைக்காக தன்னை முற்றுக அர்ப்பணித்த அவரின் தூய துறவுள்ளம், உலகம் உய்ய அவர் உணர்த்திய அழியா உண்மைகள் அவரை இவ்வுலகின் பொதுவுடைமையென மாநிலம் வாழ்த்த இடம் கொடுக்கின்றது. அன்பு, நான், ஒப்புரவு, கண்ணேட்டம் வாய்மை என்ற ஐம்பெரும் பண்பும்பெற்று தகைசான்ற சான்ருேனுய் விளங்கிய எம் இயேசுவை—இதயக் கனிவை வாயார வாழ்த்தி நெஞ்சினில் ஏற்றி நித்தலும் அவர் திருவடிபோற்றி உய்யும் வழி காண்போமாக.

"ஏக மொழியும் இனியதிரு வாசகமும்
நேச அருட்பாவுமென் நெஞ்சு"



# விடியுமா?

— சரவணன் —

உலகமெங்கும் படிந்திருந்த பாவ இருள் நீங்கி புதியஜோதி புலர்ந்ததினம் — பாலன்பிறந்த தினமாகிய நத்தார்தினமாகும்!

அது விடிந்து ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும், அந்தப் புனிததினம் தரும் நினைவுகள், காலப்பெரு வெள்ளத்தால் கரையாது, மறையாது மக்கள் மனதிலே இன்றும் என்றும் அழியாது அமரத்துவம் பெற்றுவிட்டது. அறியாமையால், அஞ்ஞானத்தால் மூடப் பழக்கவழக்க அடிமைத்தனத்தால் மக்கள் வழிதவறிய ஆடுகள்போல் அலைந்தார்கள். அவர்களை மீட்க 'ஒரு மீட்பன்' வருவாரென பைபிள் வரலாறுகள் ஏற்கனவே கூறியிருந்தன. வந்தார் யேசுபிரான்! சரியான பாதையில் அவர்களைச் சேர்க்க, அவர்களுடைய அஞ்ஞானத்தைப் போக்க, சரியான சந்தர்ப்பத்தில் வந்த சரியான 'மீட்பன்' யேசுபிரான் பிறந்தார்; அதுவே நத்தார்தினமாகும்!

பொய்யும் போலிவேஷமும் போட்டு, குணங்கெட்டு நெறி தவறி, பாவிகளாக நின்ற மக்களையே பரமபிதாவின் சித்தத்தைக் கொண்டுவந்தார் யேசு, அன்பைப் போதித்தார்; அறிவைப் போதித்தார்; ஆண்டவருடைய பெருங் கருணையைக் காட்டினார். உண்மையை வலியுறுத்தினார்; உலகில் பொறுமையை, சமத்துவத்தை, சகோதரத்துவத்தை எடுத்துக் கூறினார்; ஆண்டவன்முன் அனைவரும்சமம் என்றார். எல்லோரும் ஒன்றுசேருங்கள்என்று வருந்தி, வருந்திச் சொன்னார். ஒருவரோடு ஒருவர் நேசமாக இருங்கள் என்று நெஞ்சு வருந்திச் சொன்னார்;

"சொஸ்தமாக இருப்பவர்களுக்கு வைத்தியன் தேவையில்லை. நோயாளிக்குத்தான் வைத்தியன் தேவை" என்று சொல்லி பாவிகளுடனும் நோயாளிகளுடனும் நெருங்கிப் பழகினார். ஏழைமக்களை இதயபூர்வமாக



நேசித்தார்; அவர்களுடைய இன்பதுன்பங்களிலே பங்குபற்றி உதவி செய்தார்.

தண்ணீரைத் திராட்சைப்பழ பானமாக்கினூர்; செய்தி நாடெங்கும் பரவியது; அலைகடல்மேல் நடந்தார். அகிலத்து மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். நோயாளிகளைக் குணப்படுத்தி, இறந்தவர்களை உயிர்ப்பித்தார்; உலகமே அதிசயித்து நின்றது; விசுவாசத்தினுல் வெற்றிகளை ஈட்டிக் காட்டினூர்;

இறைவன் என்ற பெயரால் ஏழை மக்களை ஏமாற்றி, கோயில்களைக் கோட்டைகளாக்கிச் சுகவாழ்வு வாழ்ந்த கயவர்களைக் கடிந்துரைத்தார்!

''குணங் கெட்டிருக்கும் சகோதரர்களே, குணப்படுங்கள்'' என்று குரல் கொடுத்தார். நேர்மையாக, நியாயமாக நடவுங்கள்: உங்களைப்போல் உங்கள் அயலானையும் நேசியுங்கள், என்று அன்புடன் கேட்டுக்கொண்டார்!

ஆனுல்—

உண்மைக்கு ஊறும், நேர்மைக்கு நெருக்கடியும் சில சமயங்களில் ஏற்படுகிறதல்லவா? தூய்மை இகழப்பட்டு, அவதூறு கிளப்பப்படுவதும் இந்த விசித்திர உலகிலே நேரிடும் விபரீதச் செயல்களில் சிலவோ?

யேசுவின் போதனைகள் ஏழைகள் கண்களைத் திறந்தன. பாவ விமோசனத்துக்கு வழிகாட்டின. அதேசமயம் கடவுள் ஆராதனை விடயங்களில் தங்கள் சொந்தச் சுகமும் நலமும் கொண்டு போலி மதத் தலைவர்களாக இருந்தோரை ஆத்திரமடையச் செய்தன; சூது மதியினருக்குப் போதனை பிடிக்குமா?

அன்பைப் போதிக்க வந்த அண்ணலைத் துன்பப்படுத்தினூர்கள்; தூஷித்தார்கள்; தொல்லைப்படுத்தினூர்கள். சோர்ந்து போனுரா?

பகைவரின் மத்தியில் பகிரங்கமாகப் பிரசங்கஞ் செய்தார்! மலையிற் செய்த பிரசங்கம்—அந்த மணிமொழிகள், மக்கள் பாவந் தீர்க்கும்அருமருந்தாகும்! மனிதகுலத்தை சரியான பாதைக்கு இட்டுச்செல்லும் ஜீவ ஒளியாக அவர் உதிர்த்த மணிமொழிகள் திகழ்கின்றன.

அவரைத் துன்பப்படுத்தியதோடு அக்கிரமம் மிகுந்த மக்கள் திருப்திப்படவில்லை. யேசு தொலையவேண்டும் என்று தொடர்ந்தார்கள். தங்கள் பழைய நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து, புதியதொரு மதம் போதிக்கிறுன் என்று குற்றஞ்சாட்டினூர்கள். குறையொன்றிலாத, குற்றம் எதுவுமே செய்யாத தேவகுமாரனைக் குற்றவாளி என்றூர்கள்.

அன்பு கொண்டு வாழுங்கள் என்றூர்; அடித்தார்கள். கருணை காட்டி வாழுங்கள் என்றூர்; கற்களால் எறிந்தனர். காரி உமிழ்ந்தனர்!

விசித்திரமான நீதி விசாரணை செய்தார்கள்; படு மோசமான கொலைகாரன், கொள்ளைக்காரனைப்போல மதித்து மரண தண்டனை விதித்தார்கள்.

கல்லும் முள்ளும் நிறைந்த கல்வாரிமலை: கொடிய குற்ற வாளிகளோடு அண்ணல் யேசு வையும் ஆணிகளால் சிலுவை யில் அறைந்தனர். மரண வேதனை! அப்பொழுதும் யாருக் காக மன்றாடினார், யேசு?

''அறியாமையினால் செய்கி றார்கள், பிதாவே மன்னித்துக் கொள்ளும்'' என்று இரக்க மேயில்லாத அந்த அரக்கர்க ளுக்காகவேதான் வேண்டினார்;

உண்மையைப் போதிக்க வந்த உத்தமரை உயிரோடு சிலுவை யில் அறைந்து சாகடித்தார்கள். அப்படித்தான் அவர்கள் நினைத் துக்கொண்டார்கள் கல்லறை யை மூடி.

ஆனால்—

தெய்வ சக்திக்கு முன் மனித சக்தி எம்மாத்திரம்?

யேசு உயிர்த்தெழுந்தார்! மரணத்தின் கூர் மடிந்தது; தீமை யின் வெற்றி ஒழிந்தது, பாபத் தின் ஆட்சி பறந்தது.

ஆனாலும்—

மனிதன் திருந்திவிட்டானா?

''யேசு பிறந்தார் என்று நத் தார், கிறிஸ்மஸ் விருந்துகள், வைபவங்கள் தடபுடலாகக் கொண்டாடப்படுகின்றன; ஆனால், மனிதர்களுடைய மன திலேயுள்ள வஞ்சக நினைப்பும், சூதுமதியும், சூழ்ச்சிச் செயலும், சுயநலச் சிந்தையும் நீங்கியபா டில்லையே! மக்களுக்காக மகி பன் யேசு செய்த தியாகம் வீண் போவதா? மனிதகுலத்தின் உய் வுக்காக, உலகுக்கு வந்து, மக் களுக்காக மக்களோடு வாழ்ந்து, மக்களுடைய பாவத்தை ஒழிப் பதற்காகவே இரத்தம் சிந்தி, உயிர்துறந்த யேசு ஒருவர் அநீதி யும், கொடுமையும், அக்கிரம இருளும் நிறைந்த இந்த உலகு விடிவதற்குப் போதாதா, என்ன?

கர்த்தர்பிரான் யேசுவின் கருத்து நிறைவேற வேண்டும்! மனிதர்களிடையே நேசமனப் பான்மையும் சமாதானமும் தோன்றி, வளரவேண்டும்! வெறுப்பும் பகைமையும் விலக வேண்டும்!! விடிய வேண்டும்!!! விடியுமா?

நன்றி ''பாணன்'' மே—1954



# இசைமாலை 3.

**ஊரிக்காடு திரு. A. நடராசா**

இராகம் : வந்தன தாரிணி ஆதி

ஆரோ : ஸரிமபதஸ } 53
அவரோ : ஸதபமரிஸ

N. B. **இந்த ராகம் சுத்தஸாவேரிக்குப் பிரதி மத்தியமமாயிருக்கிறது; ஆனால் சுத்த ஸாவேரி 28 மேளத்தில் ஜன்யம்; ஷெ ராகம் 53-வது மேளத்தில் ஜன்யம். சாஸ்திர ரீதியிலும் வித்தியாசமிருக்கத்தான் செய்கிறது;**

பாட்டு

**பல்லவி**

பாங்கியரே சொல்லு வீர் — தூது
பரந்தாமன் அரவணை துயிலுமிடம் போய் (பாங்கி)

**அநுபல்லவி**

பூங்கனிச் சோலையில் பைங்குழலின் நாதம்
புத்தியைக் கெடுத் தெந்தன் சித்தம் சிதைந்ததென்று (பாங்கி)

**சரணம்**

1. மாதவனே நல்ல மாயக் காரனடி
பேதமில்லாமல் நான் காதல் கொண்டேனடி
ஆதவ கோகுல அனந்தன் முகுந்தனடி
ஆனந்த யோகம் தரும் அன்பர் விசுவாசனடி (பாங்கி)

2. அல்லும் பகலுமவன் ரூபமே சிந்தையில்
மெல்ல மெல்ல வந்து மனசை உருக்குதடி
கல்லைக் கனியாக்கு மடி சொல்லை அமுத மாக்குமடி
கண்டவர்களுள்ளத்தில் கவி மழை பொழியுமடி (பாங்கி)

* * *

## ஸ்வர சாஹித்யம்

### பல்லவி

1. ; ; பதா - ஸ்தா - பா, - பாமா, | தா; - ; ; | தஸ்ரிஸ் - ததபம ||
பாங் கிய - ரே - சொல்லு வீர் - - - தூ - - - து - -

2. ; ; பதா - ஸ்ஸா ஸ்தபம - ரிமரிம | தா; - ; ; | தஸ்ரிஸ் - ததபம ||
பா-ங் - கிய ரே - - - சொல்லு - வீர் - - தூ - - - து - - -

3. ; பதா - ஸ்ஸா ஸ்ரிஸ் தாஸ்த பாதப மாபம | தா; - ; ; | தஸ்ரிஸ்ததபம ||
பாங் - கிய ரே - - - - சொல் - லு - வீர் - - தூ - - து - -
பம - பபா - பமா - ரீ; - ரீஸா | ; ஸரீ - மபா | தாதா - தபமா ||
- - பரந் தா - மன் அர வணை துயி லுமி டம்போய்

(ஷ இரண்டாவது சங்கதியைப் பாடிவிடவும்)

### அனுபல்லவி

1. ; ; பமா - பதா - ஸா ; - ஸாஸா | ; தஸா - ரிஸா | தா;-ததபம ||
பூ - ங் கனிச் சோ லையில் பைங் குழ லின் நா - தம் -

2. ; ; பமா - பதா - ரிஸ் ரிஸ் - தபதா | ; தஸா - ரிரீ | ஸா ; ததபம ||
பூங் - கனிச் சோ - - லையில் பைங் குழ லின் நா - தம்

1. ; ; பதா - ஸ்ஸா - ஸா ஸா - தபதா | ; பதா - தபா - | பமரிஸ - ரிமபா ||
புத் தியைக் கெடுத் தெந்தன் சித் தம் சி தைந்த - தென்று

2. ; ; ரீ - ; ப்மா - பம்ரீ ; ரீஸா | ; பதா - ஸ்ஸா | ஸ்தபம - ரிமபா ||
புத் தியைக் கெடுத் தெந்தன் சித் - தம்சி தைந்த - தென்று

(பல்லவியின் 2-வது சங்கதியைப் பாடி விடவும்)

### சரணம்

; பபா - பமா - பாமா - தா ; | ; மபா - மரீ ; | ரீ ; - ஸாஸா |
மா - தவ னேநல் ல மாயக் கா - ர னடி
; ரிமா - பபா - பமரீ - ரீஸா | ; ஸரீ - மமா | பா ; - பாபா ||
பே - தமில் லாமல் நான் கா - தல் கொண் டே னடி

(ஷெ அனுபல்லவி ஸ்வரம் போல்)

ஆதவ கோகுல அனந்தன் முகுந்தனடி
ஆனந்த யோகம் தரும் அன்பர் விசுவாசனடி (பாங்)

(அடுத்த சரணமும் இதேபோல்)

# வாழ்வைத் தேடி : : :

— அரியம்.



கண்ணை இழந்தவனுக்கு இருள் என்ன! பகல் என்ன!!

நானும் என் கண்களை இழந்து விட்டேன், இருண்டிருந்த என் கண்களுக்கு அவள் ஒளியாக வந்தாள்.

ஆனால், அந்த ஒளியில் என்னால் வாழ முடியவில்லை;

அழகைத் தேடவில்லை, அவளிடம் நான் தேடியதேல்லாம்......

" என் அன்புதானே!, அது தானே உங்களுக்கு என் காணிக்கை" என்றாள்.

அவளிடம் நான் பணத்தை எதிர்பார்க்கவில்லை நான் அவளிடம் வேண்டியதெல்லாம் ...

" இறைவனால் எனக்குத் துணைவனாய்த் தரப்பட்டவர்கள் நீங்கள், உங்கள் மனம் நோகும்படி நான் நடப்பேனா?" என்றாள்;

உலகுக்கு இது தெரியாத உண்மை!!

நானும் அவளும் உள்ளத்தால் மாலை மாற்றிக்கொண்டுவிட்டது அந்த ஒருவனைத்தவிர யாருமே அறியமாட்டார்கள்;

நாம் எடுத்துக்கொண்ட சத்தியவாக்கு......

அதன்படி, எம் இருவரின் உடலும் மண்ணைவிட்டு மறையும் வரை அவள் என் துணைவிதான் —நான் அவள் துணைவன்தான் அந்த ஒருவன் — இறைவன்— இதற்கு அவன்தான் சாட்சி;

என் சேமிப்புச் செல்வங்கள் எல்லாம் அவள் எனக்கு எழுதிய அன்பு மடல்கள்தான்.

" இறையன்பில் வாழும் என் அன்பின் துணைவருக்கு........"

என அவள் தன் எழில் கரங்களால் எழுதிய வார்த்தைகள் இன்னும் என் இதயத்துடிப்போடு சேர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கின்றன;

இணைந்துவிட்ட இரு உள்ளங்களோடு போராடுவதற்கென்றே காத்திருக்கும், சாதி—சமூகம்—சம்பிரதாயம் எம்மையும் போராட்டத்திற்கு அழைக்காமலில்லை;

எமக்குத் துணை.........

" இறைவன்தான்......" என்றாள்;

அவனையே ஆயுதமாகக் கொண்டு போராடினோம்.

உணவின்றி—உறக்கமின்றி — இரவுபகலாய், அவன் அருள் வேண்டி அவள் நின்றாள்.

1971-ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து கொழும்பிலுள்ள எமது நிர்வாக அலுவலகம்
99, மாதம்பிட்டியா வீதி,
முகத்துவாரம்,
கொழும்பு 15
என்னும் புதிய முகவரிக்கு மாற்றலாகியுள்ளதென்பதை தாழ்மையுடன் அறியத் தருகிறோம்.

நிர்வாக ஆசிரியர்.

போராட்டத்தின் முடிவு—

எழில்நகராம் யாழ்நகர் நோக்கி மின்வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது அந்தப் புகையிரதம்.

உள்ளத்தூய்மையின் பிரதிபலிப்பால் என்றும் மலர்ந்திருக்கும் அவள் முகம் அன்று குவிந்த மலராய் கீழ்நோக்கியிருந்தது.

தூய்மையான எங்கள் காதல் வாழ்க்கையில் அன்றுதான் முதல் தடவையாக நான் அவள் கன்னத்தை மெல்லத் தழுவினேன். அடுத்தவிநாடியே என் இருகரங்களையும் பற்றி, தன் முகத்தை அவற்றுள் புதைத்துக் கொண்டாள்.

என் அன்புத் துணைவியிடம் எதைக்காணக்கூடாதுஎன்று கற்பனைக் கோட்டைகள் கட்டியிருந்தேனே—அது—அந்தப் புனிதவதியின் கண்ணீர் இப்பொழுது என் கரங்களைக் கழுவிக்கொண்டிருந்தன.

என் இதயத் துடிப்பே நின்றுவிட்டது போன்ற பிரமை.

"உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் சொட்டுதடி......" என்ற அந்தக் கவிஞன் பாடல் அன்று என் அனுபவத்தில் உண்மையாயிற்று.

என் மனக்கோட்டை இடிந்துவிட்டது—மனம் தளர்ந்துவிட்டது.

அப்படியானால் அவள் போராட்டத்திற்கு அஞ்சிவிட்டாளா?.........

"சாதி—சமூகம்—சம்பிரதாயம் இவற்றுடன் என்றும் நான் போரிடத் தயார். ஆனால்......"

ஆனால்—

"பத்துமாதம் சுமந்து பெற்றுவிட்ட என் அன்னை—பாசத்தைக் கொட்டி வளர்த்துவிட்ட என் தந்தை இவர்களின் கண்ணீருடன் என்னால் போராட முடியவில்லையே...." என்றாள்.

மெல்ல என் கரங்களை அவளிடமிருந்து விடுவித்துக்கொண்டேன். என் கண்களும் குளமாகிக்கொண்டிருந்தன. என் கண்ணீரைக் கண்ட அவள் தன் மிருதுவான எழில்வதனத்தை என் நெஞ்சோடு சேர்த்துக்கொண்டாள்.

அவள் பட்டுக் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே மெல்ல அவளைத் தாங்கி அணைத்துக் கொண்டேன்.

"உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன், நீங்கள் கண்ணீர் விடுவதைக் கண்டால் என்னால் வாழமுடியாது. என்னைக் கொன்றுவிடாதீர்கள்......" என்றாள்.

அப்படியானால் அந்த ஒருவனை சாட்சியாக வைத்து அளித்த வாக்குறுதி........?

"ஆண்டவனைத்தானே சாட்சியாக வைத்தோம்; பெற்றோர்கள்தானே இவ்வுலகின் கண்கண்ட தெய்வங்கள்—அவர்கள் வெறுத்தால், ஆசி அருள மறுத்தால் இவ்வுலகில் இன்பமாக நாம் வாழ்வதெப்படி?" என்றாள்.

உள்ளத்தையல்ல—உடலை, அவள் உணர்வுகள் அற்ற வெறும் சடப்பொருளாக்கிக் கொண்டுவிட்டாள்: அதனால் தான் அவள் உதடுகள் வெறும் சமாதான வார்த்தைகளைப் பேசின.

"எங்கள் இருவரின்சார்பிலும் நீங்கள் ஒரு வாழ்வைத் தேடிக் கொள்ளுங்கள்— தூரத்தில் இருந்துகொண்டே நான் உங்கள் இன்பமானவாழ்வைக்கண்டு மகிழப்போகிறேன்" என்றாள்.

அவள் பேசும் வார்த்தைகளா இவை! எனக்கு இன்னொரு வாழ்வா? உடலுக்காக ஒரு வாழ்க்கையா?

அழகிய பளிங்குக் கண்ணாடியில் கல்லெறி பட்டதுபோல் அவள்சொல் லெறிபட்டு அவளாக ஏற்றிவைத்த மனவிளக்கு உடைந்து சுக்குநூறாகிக் கொண்டிருந்தது; புகையிரதம் நின்றது.

இப்பொழுது என்னைப் போக விடுங்கள்—உலகுக்குத் தெரியாத என் உரிமையுடன் சாதி—சமூகம்—சம்பிரதாயம் தடுக்க முடியாத பூரண உரிமையுடன் உங்களிடம் மீண்டும் வந்து சில நாட்களாவது உங்களுடன் வாழ்ந்து உங்கள் பாதத்திலேதான் மடிவேன். என்னை நீங்கள் தான்.......

எனது இந்தச் சின்ன ஆசையையாவது அந்த ஆண்டவன் எனக்கு அருளமாட்டானா....." என்றாள்.

என் உள்ளம் வேதனையால் வெந்துகொண்டிருந்தது. வார்த்தைகள் வெளிவரவில்லை.

அவளை வரவேற்க—இல்லை இழுத்துச்செல்ல ஒரு சிலர் வந்திருந்தனர் உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவர்கள்போல் அவர்கள் நீண்ட உடை அணிந்திருந்தனர்.

மன்னியுங்கள், என் மன மகிழ்வுக்காக நீங்கள் ஒரு வாழ்வைத் தேடிக்கொள்ளுங்கள்: எனக்குப் பூரண உரிமை கொடுத்திருக்கிறீர்கள்—நான் உங்கள் வாழ்க்கைத்துணைவி—உங்களிடம் வராமல் மடியமாட்டேன்."

என்றவள் என்னைவிட்டு அவள் வெகுதூரம் போய்விட்டாள்.

தான்விரும்பிய வாழ்வைத் தேடி அவள் போகவில்லை;

அந்த வாழ்விற்கு அவள் பலவந்தமாகத் தள்ளப்பட்டு விட்டாள்.

எனக்கு ஒரே ஆறுதல்—அவள் மீண்டும் என்னிடம் வருவாள்.

# விஞ்ஞானப் பரிசுப் போட்டி இல.—1

நாம் எதிர்பார்க்காதவகையில் பல நூற்றுக்கணக்கான மாணவர்களும் மாணவிகளும் 'விஞ்ஞானப் போட்டியில்' மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டார்கள். சிலர் விண்ணப்பத்தாள் கிடைக்கவில்லை என மன்னிப்புக் கோரும் கடிதத்தையும் இணைத்து வெற்றுத் தாள்களில் தங்கள் விடைகளை நிரப்பியிருந்தார்கள்.

அதிகமானோர் சரியான விடைகளையே அனுப்பியிருந்தார்கள். எமது தமிழ் மாணவ மாணவிகள் விஞ்ஞானக் கல்வியில் காட்டும் திறமையைக் கண்டு நாம் பெருமிதம் அடைவதுடன், இதில் கலந்து கொண்டு எம்மை மகிழ்வித்த மாணவ மாணவிகளுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பரிசுத் தொகை ரூபா 50

ஆரம்பப் போட்டியிலேயே பலர் இதில் கலந்துகொண்டமையினால் பரிசுத்தொகை அதிர்ஷ்டசாலிகளான மூவருக்குப் பகிர்ந்து கொடுக்க ஆசிரியர்குழு தீர்மானித்துள்ளது. மேலும் இவர்களுக்கு 'எழில்' 1 வருடம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

1-வது பரிசு 20 ரூபாவைப் பெறுபவர்:

பொ. இராசேஸ்வரி, [யாழ். இந்துமகளிர் கல்லூரி,]
31, அராலி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

2-ம், 3-ம் பரிசாக ரூபா 15 பெறுபவர்கள்

இ. திலகவதி, [அச்சுவேலி மகாவித்தியாலயம்,]
காலானே, அச்சுவேலி.

M. ராஜன், நொரிஸ் கனல்,
கொழும்பு—10.

இவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

**அடுத்த இதழில் விஞ்ஞானப் போட்டி இல. 2**

# யார் அழைத்தார் ?
# ஏன் வந்தீர் ?

நீ. மரியசேவியர்




அற்புதமாம் ! அதிசயமாம் ! அமலன் ஓர் ஆள் உருவில் அவதரித்தான் அவனியிலே ! அன்னைமரி அழகு திகழ் அருட்கரத்தில் தவழுகின்றான் அப்பாலன் என்றார்கள் ! சென்றேன் நான் !

வான் நகரத் தூதர்களோ வழி மறித்தார் ! வகை தெரியாத் தொனியினிலே மொழி பொறித்தார் ! வாயடைத்து நின்றேன் நான் ! யார் அழைத்தார் ! ஏன் வந்தீர் ? என்றெல்லாம் கேட்டார்கள் !

"உட் செல்லத் தடையில்லை
உள்ளத்தில் கொடை உண்டேல் !"

விடை காணத் துடித்தேன் நான் ! எனையோ எடைபோட்டுப் படித்தார்கள். அப்போதுதான் பார்த்தேன். அடிபிடிக்கும் ஓசையுடன் ஆட்டிடையர் அணுகுவதை ! ஐயகோ ! கோலமென்ன ! ஆடுகளின் ஓலமென்ன ! ஆடை என்ன அருவருக்கும் வாடை என்ன ? அழுக்குப்படர் மேடையென்ன என்று நான் எண்ணி எண்ணி வழி அகன்று ஏங்கி நின்றேன் ! வந்தவரை வரவழைத்தார் வானவர்கள் ! வாழ்த்துரைத்து மொழி குழைத்தார் ! மடையர் என்றும் கடையர் என்றும் மதிப்பில் கெதி உடைந்த

வர்கள் நடை இலங்க — நகை துலங்க — படையெனவே போய் முடிந்தார் !

போய் முடிய ......

ஏனிந்த ஓரவஞ்சம் ! வானவரே ! சூர நெஞ்சம் ! கானகத்து இடையருக்குக் காட்சி தரக் கடவுள் மஞ்சம் ! காலத்தோடு வந்த எனக்குக் காண்பதற்கோ வசதிப் பஞ்சம் ! என அலைகடல் போல் இரைந்தேன் ! அர்த்தம் கேட்க விரைந்தேன் ! அவ்வேளை வந்தவர்கள் மூவேந்தர் என்போர்கள் ! அவர்களிலே, அறங்கண்டேன்; அருள் கண்டேன்; அகம் மலரும் அன்பு கண்டேன். நிறைகுடம்போல் பொலிவு பூத்த அறிவு கண்டேன். அதனாலோ என்னவோ ! உள் நுழைந்தார்; வானவர்கள் வணங்கி வாசல் இருமருங்கும் விலகி நின்றனர். இத்தனையும் பார்த்துப் பித்தனைப்போல் நின்ற எந்தன் சித்தமெல்லாம் வெந்ததம்மா ! எனக்கென்ன குறைபாடு? ஈன இடையர்களும் ஞானமுடையவரும் உட்புகவோ தடை இல்லை எந்தனைப்போல் ஏழைகட்கு ஏனோ இந்த ஏமாற்றம் ! எதிர்த் தோற்றம். சீறினேன் புலிபோல — சினந்தெழுந்தேன் சிங்கம்போல் ! மாறியதால் எரிமலைபோல் — மதி இழந்து பதில் கேட்டேன் ! வானவர்கள் சொன்னார்கள் ! தூயவனைக் காண்பதென்றால் தீய நெஞ்சம் கூடாது ! தீய நெஞ்சம் அற்றவர்கள் கள்ளமில்லா வள்ளல்கள்தாம் ! பிள்ளைக் குணத்துடையோர் — வெள்ளை மனத் துடையோர் — கொள்ளை அருள் பெறுவார் ! கோடி இன்பம் உறுவார்கள் ! தீய நெஞ்சம் அற்றோர்கள்—முற்றும் கற்றோர்கள். தள தளம்பா நிறைகுடங்கள் தளர்வறியா ஒளிக்கலங்கள் ! அத்தகையோர் நிறைவு மதி உடையோர்—அமரக்கதி அடைவோர்—ஆண்டவனைக் காண்பார்கள்— பரம்பொருளைப் பாலகனில் பார்ப்பார்கள் — பக்தியுடன் பண்பனைத்தும் சேர்ப்பார்கள்.

என் நெஞ்சம் நான் உணர்ந்தேன் ! அங்கு கள்ளம் அல்லால் பிள்ளை இல்லை — வெள்ளையும் இல்லை ! — பள்ளிகொள்ளும் அரை குறை அறிவுண்டு — அதைக் கொண்டு அகிலத்தின் முதலோனை — அனைத்துலகமும் கடந்தோனை — கடவுளையே — எடைபோட எண்ணுகிறேன்; என் தப்பு — என் தப்பு !



தொடர்கதை

# மன்னிக்க வேண்டுகிறேன்

சேந்தாரகை

## அத்தியாயம் 5.

அவனுடன் பிணைந்த நினைவு, கலந்துவிட்டது. அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் கலந்த சித்திரக் கோலமாய்க் காட்சியளித்தாள்.

தன் மனதை அவள் சுதாகரித்துக்கொண்டே, "என்ன இண்டைக்கு, ஒருத்தரையும் இன்னும் காணேமே!" என்று கேட்டவாறே, தன் கதிரையில் இருந்தாள்; அவனும் பக்கத்தே இருந்தான்.

"உங்களுக்குத் தெரியாதோ! இண்டைக்கு எல்லோரும் லீவு. நீங்கதான் டி. ஆர். ஓ. நான்தான் பெரிய கிளாக்கராம்!" அவன் சிரித்தான்.

"அப்ப, நானும் நீயும்தான்!" — அவன் சிரிப்பில் அர்த்தம் இருந்தது. இப்படியான ஒரு தனிமை கிடைத்ததே என்று மனம் இன்பத்தால் கனத்தது. அவர்களுக்கு கிடைத்ததோ 'காதலர் தனிமை'.

"இல்லே, நாங்க ரெண்டு பேரும்தான்".

ஏதோ ஒரு பெரிய பகிடியை விட்டதுபோல் வாய்விட்டுச் சிரித்தாள். அதில் சிரிக்க என்ன இருக்குதோ! வாய்விட்டுச்சிரித்த ரெண்டு பேரும், வாய்மூடாது ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டிருந்தனர்,

அன்ரனியும் அன்றுவந்த கடிதங்களைக் கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டான்.

மீண்டும் அவர்கள் இருவரும் தனிமையில் விடப்பட்டனர்.

'ஏன் வந்தார்கள்?' என்று புரியாமலேயே, அங்கே தங்கள் வேலைகளைச் செய்து முடிக்க வந்தவர்களை, இன்று போய் நாளை வா!" என்று சொல்லிக் கொண்டிருந்தான் — கண்ணன்.

வழியில் கந்தோர் வேலைக்கு வருகிறவர்களை—திரும்பிப் போகின்றவர்கள், திருப்பிக் கூட்டிக்


### தேவை

கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டுநகர் ஆகிய இடங்களில் எழிலுக்கு விளம்பரம் சேகரிக்கக் கூடுவோர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுந்த கொமிசன் தரப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:
S. கிறிஸ்ரி,
(விளம்பர முகாமையாளர்)
99, மாதம்பிட்டியா வீதி,
கொழும்பு 15.

கொண்டு சென்றது அவனுக்கு சிரமத்தைக் குறைத்தது.

மணி பத்தரையாகிவிட்டது.

வழக்கமாகத் தேத்தண்ணி வைத்துக் கொடுக்கும் அன்ரனி இன்னும் திரும்பி வரவில்லை.

கண்ணன் அங்குமிங்குமாகச் சுழன்று பார்த்தான். கந்தோரில் ஒருத்தருமில்லை. யாரைத் தான் அவனும் அனுப்புவது?

"என்ன சுழருறியள்?"—ராதா

"இல்லை, இண்டைக்கு தேத் தண்ணி இல்லையே".

"ஏனும்!"

"அன்ரனியையும் காணேன். ஆக்களையும் காணேன்".

"ஓ! தேத்தண்ணி இல்லாத குறை......"

"ம்!"

"தரமாட்டேன்"

பின்னே, என்ன தருவியாம்?' என்று கேட்டுக்கொண்டே, அவளை ஏறிட்டுப் பார்த்தான். அந்தப் பார்வை, விஞடிக்கு விஞடி பலவித உணர்ச்சிகளைக் கொட்டி அவளை என்னவோ செய்தது.

"ஏன் அப்படிப் பார்க்கிறியள்?" கேட்டுக் கொண்டே, அவன் பார்வை படும் இடத்தைப் பார்த்தாள். அவளுக்கு 'சுருக்' என்றது. தளர்ந்திருந்த தன் தாவணியை இழுத்துச் சரி பார்க்க முடியாத நிலையில், அங்கிருந்து விலகிச் சென்ருள்.

"என்ன ராதா!...... அப்ப..."

"சீக்! உங்க பேச்சும், பார்வையும்...... நான் கொண்டு வந்த கோப்பியிருக்கு. போட்டுத்தாறென்...... குடியுங்கோ".

"இப்ப நான் என்ன சொன்னேன்; என்ன பார்த்தேன். நீயாக எதையோ.... " என்று சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்காது, கடிதங்களைப் பார்ப்பதுபோல, குனிந்து கடிதங்களைப் பார்த்துக் கொண்டே தான் கண்ட காட்சியை மனத் திரையில் ஓட விட்டு, ரசித்துக் கொண்டிருந்தான். 'சென்சர்' பண்ணப்படாத காட்சி!

'சே! நான் அப்படி எண்ணலாமா? நான் கல்யாணம் முடிச்சு எவ்வளவு காலம்! நேற்று முடிந்ததுபோல இருக்குது. இருந்தும், இப்படியான ஆசை ...... நான் மாத்திரம்தானு? ...... இல்லை, மனிதர்களே அப்படித்தானு? எனக்கு ஏன் இந்தச் சபல புத்தி ......? கண்ணன் மனதில் இப்படி தோன்றினுலும், ஆசை அலைகள் அவைகள் அத்தனையையும் அடித்துக் கொண்டுபோகின்றனவே.

"இந்தக் 'குக்கரை' ஒருக்கா பத்தவையுங்கோவேன்" என்ற ராதாவின் அழைப்பு, அவன் நினைவைக் கலைத்தது; அவன் குக்கரைப் பத்த வைத்தான்.

தீக் குக்கர்தான் பத்தியதா? குக்கர் பத்தியதற்கான அறிகுறி தீச் சுடர் மூலம் தெரிந்தது. அவள் அருகோடு அருகாக நின்றதினுல் ஏற்பட்ட வெப்பத்தின் தாக்கம் அவள் உடல் பூராவும் பத்தியது. நிமிர்ந்தவள், குனிந்து பார்த்துக் கொண்டு நின்ற ராதாவின் நாடியில் இடிபட்டாள். திகைத்துப் போய், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

குக்கர் பத்தி, விளாசி எரிந்து கொண்டிருந்தது.

''ராதா!'' என்று அவன் தன் அடி மனத்திலிருந்து, அழைத்த குரல், மெதுவாக மூச்சை இழுத்துக் கொண்டு வெளிவந்தது.

''குக்கர் பத்தி எரியுது குறையுங்கோ!'' என்று நிலைமையைச் சமாளிக்க முயன்றாள்.

குக்கரை அவன் குறைக்கவில்லை. அவன் நெஞ்சிலும் 'குக்கர்' எரிந்து கொண்டிருந்தது போலும். அவன் குக்கரைக் குறைத்தான்.

அளவான நீல நிறத் தீச் சுடருடன் எரிந்து தண்ணீரைச் சூடாக்கிக் கொண்டிருந்தது.

அவன் பத்தி எரிந்த உணர்வும் அடங்கிப் போய், உள்ளத்திலேயே மடங்கி, ஒடுங்கியது.

''என்ன கண்ணன் அப்படி பார்க்கிறியள். ஒரு கணத்திலே ஏற்படும் தவறு, எவ்வளவு காலத்துக்கு ஒருத்தியின் வாழ்வைப் பாதிக்கும். இறந்த பின்பு கூட தொடர்ந்து வாறது தர்மமுமல்ல,பாவமுமல்ல; இப்படியான தவறுகள், ஒரு குடும்பத்துக்குக் காலம் காலமாகக் கிடக்கும். குடும்பம் என்ன அம்மா-அப்பா விளையாட்டா ? நாங்க என்ன குழந்தையளா ? மறந்துபோக! நாங்க வயது வந்தவர்கள். எங்களின்ரை ஒவ்வொரு செய்கையும், வாழ்விலே புண்ணாகி தழும்பாகி, நினைவாகி நிற்கும் நினைவுடன் வாழுகிற வாழ்வுக்கு பரிசுத்தம் தான் முக்கியம். பரிசுத்தத்திற்கு பங்கம் ஏற்பட்டால், அந்த இனிக்கும் நினைவே—கசக்கும் நினைவாக மாறி, காலகெதியில், அப்படியொரு பிணைப்பு இருந்ததா என்ற சந்தேகத்தையே எழுப்பும். இது நான் சொல்லவில்லை; 'என் கண்ணன்' சொன்னது.''

அவன் சொல்லிய வார்த்தைகளை, அவள் அவனுக்கே திருப்பி விட்டாள். தன் கை விரல்கள் தன் கண்களை குத்திய நிலைமை கண்கள் கலங்க—தயங்கி நின்றாள்.

''என்ன பேசாதிருக்கின்றீர்கள். இந்த உள்ளத்தையே உங்களுக்கு தந்தாச்சு. இந்த உடல் ஒரு பெரிசா? நான் என்ரை உடலைத் தாறென். என்ரை உடலைத் தந்தால்—நான் நம்பி வாழப் போகும் அந்த 'இனிய நினைவு'—என்றும் 'இனிய நினைவாக' இருக்க முடியுமா? ..... ''

அவள் எதை எதையோ சொல்லிக்கொண்டு போனாள். அத்தனையும் அவன் அவளுக்கு முன்பே கூறியவை.

ஆயுதமில்லாது, அடிபட்டு செத்தாலும் சாகலாம். கொண்டுபோன ஆயுதத்தைப் பறிகொடுத்து அதே ஆயுதத்தால் அடிபட்டு சாவது என்றால்! ......

அவளைத் திரும்பிப் பார்க்காது தன் இடத்திற்குத் திரும்பினான்.

''என்ன கோபமா?''—ராதா.

அவள் அவன் தோளைத் தொட்டுக் கேட்டாள்.

''இல்லை ராதா! நான் என் மனைவி ருக்குவை நினைத்தேன்! அவள் கையெடுத்துக் கும்பிடும்

தெய்வம் என்னைத் தவறு செய்ய விடாது, எப்படியோ, யார் மூலமோ தடுத்துவிடும்".

"......புரியவில்லையே!"

"எவ்வளவுதான் உணர்ச்சி வசப்பட்டாலும், இதுவரை ருக்குவைத்தவிர வேறு யாரையும் நான் தீண்டவில்லை; என் மனம் தீண்டியிருக்கலாம்; இதை நான் திறந்து சொல்லத் தயார். வாழ்வு என்பது என்வரையில், ஒருவர் உணர்ச்சியை இன்னொருவர் மதித்து வாழப் பழகிறது தான்".

"................"

"சரி! ராதா, கோப்பியைக் கொண்டுவா!"

அவனுக்கு முன்னே ஒரு கிளாஸ் கோப்பியை வைத்துவிட்டு, அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"ஏன் அப்படிப் பார்க்கிறாய்?"

"என்ன கண்ணன்! நான் பார்க்கக் கூடாதா?"

"ராதா! என்னைக்குழப்பாதே; இல்லை, குழம்ப வைக்காதே!"

மனிதன் பலவீனமாக இருக்கலாம். உள்ள பலவீனத்தைக் காட்ட, அவனுக்கு உடம்பெல்லாம் உளைச்சல். இல்லாத பலத்தை இருப்பதாக நினைத்து, வாழ முயற்சிப்பதனால்தான் அவனுக்கு வாழ்க்கையில் இளைப்பும் களைப்பும் ஏற்படுகின்றதோ!

வேலை ஒன்றும் செய்யாமலே அவர்கள் களைப்படைந்தவர்கள் போல் காணப்பட்டனர்.

வேலை செய்துகொண்டிருக்கும் மணிக்கூடு, எதுவித களைப்புமின்றி ஓடிக் கொண்டிருந்தது.

(தொடரும்)


# தேவை! 'எழில்' ஏஜண்டுகள்!

ஈழத்திலே மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் 'எழில்' இலக்கியப் பத்திரிகைக்கு இலங்கை எங்கும் விற்பனையாளர்கள் தேவை!

விபரங்களுக்கு எழுதுங்கள்:

S கிறிஸ்ரி,
விளம்பர, விற்பனை முகாமையாளர்,
99, மாதம்பிட்டியா வீதி,
கொழும்பு 15.

# வந்துகுவியும் வாசகர் கடிதங்கள்




எழில் நங்கையின் பருவ வளர்ச்சிகண்டு எண்ணற்ற வாசகர்கள் பெருமிதம் கொண்டவர்களாய் பல நூற்றுக்கணக்கான பாராட்டுக் கடிதங்களை அனுப்பியவண்ணம் இருக்கிறார்கள். இடமின்மையால் அவற்றுள் சிலவற்றை இங்கே தருகிறோம். நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதியனுப்புங்கள்; எழில்நங்கை தன் வளர்ச்சியில் உயர்ச்சி கொள்வாள்.

— ஆசிரியர்

**பி. சரஸ்வதி**
**நீர்வேலி.**

"மன்னிக்க வேண்டுகிறேன்" ஆசிரியர் எங்கள் ஆவலைத் தூண்டிக் கொண்டே போகிறார். அவரை என்னால் மன்னிக்கவே முடியாது. ஆனால் பாராட்டாமலிருக்க முடியவில்லை;

* * *

**ப. செ. தி. மங்கயர்க்கரசி**
**களனி.**

.........சாப்பாட்டுக்கடை வியாபாரத்திலும், பத்திரிகைத் தொழிலிலும் நிறையப்பணஞ் சம்பாதிக்கலாமென அமரர் கல்கி எங்கேயோ எழுதியிருப்பதை நான்படித்த ஞாபகமுண்டு. ஆனாலும், ஈழத்தைப் பொறுத்த வரையில், இந்தப் பத்திரிகைத் தொழிலில் இறங்குவது, எல்லோரும் ஏறிவிழுந்த குதிரையிலே சக்கிடுத்தார் ஏறி சறுக்கி விழுந்த மாதிரித்தான்! அப்படியிருந்தும், 'எழில்' பத்திரிகையைத் தாங்கள் இதழுக்கு இதழ் எழிலாகவே படைத்து வெளியிடுவது பாராட்டுதற்குரிய தொண்டாகும். தங்கள் முயற்சி வெல்க! எழிலுக்கு எங்கள் முழு ஆதரவும் உண்டு......

* * *

**ராணி—செல்லம்**
பரித்தித்துறை,

'எழில்' நங்கை எங்களைப் பெரிதும் கவர்ந்து விட்டாள்; மாதமொருமுறை எழில் நங்கை வெளிவரமாட்டாளா? அவள் எழிலைப் பருகக் காத்திருக்கிறோம்.

மாயக்கண்ணனின் 'நீலநிறநைலக்சாரி' சிறு கதை படித்தோம். கவர்ச்சியால் விரைந்தெழும் உணர்ச்சியின் வேகத்தையும், அறியாமையின் முடிவையும் அளவிடும் சிறு கருவியாகவும் அமைந்துவிட்டது. வாழ்க 'எழில்' வளர்க அதன் இலக்கியப்பணி!

*    *    *

தி. வளர்மதி
சாவகச்சேரி.

ஈழத்திலே மிகச்சிறப்பான முறையில் வெளிவரும் ஒரே இலக்கிய இதழ் 'எழில்' என்பதனை நிருபித்து விட்டீர்கள். பிரச்சனைகளுக்கு இடமளிக்காமல் வாசகர்களுக்கு இனிய எழுத்தின்பம் நல்கும் தங்களை யாரும் பாராட்டமலிருக்க முடியாது! நானும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

*    *    *

து. வித்தியானந்தன்
வத்தளை.

சபாஷ், ஆசிரியரே! ஈழத்திலே தரமான பத்திரிகையொன்றை வெளிக் கொணர்ந்து விட்டீர். அட்டையில் தான் கவர்ச்சியில்லை. உங்கள் விஞ்ஞானப் போட்டி மாணவர்களுக்கிடையே உற்சாகத்தை ஊட்டும் என நம்புகிறேன்.

*    *    *

செ. பேரின்பநாயகம்
மண்டூர்,
மட்டக்களப்பு.

'எழில்' படிக்கும் வாய்ப்புப் பெற்றோம். பலவிடயங்கள் பாராட்டுக்குரியவனவாக அமைந்திருக்கின்றன.

"ஈழத்த இலக்கியம்" என்ற தலைப்பில் சரவணையூர் சம்பந்தன் எழுதியுள்ளார்.

ஈழத்து இலக்கிய உலகுபற்றி விரிவான கண்ணோட்டம்—அதுபற்றி விளக்கம்—நமது பணிபற்றி எல்லாம் விவரித்திருக்கிறார். படித்துப் பருகுவதற்கு மட்டுமன்றி உள்ளத்தில் பதித்துச் செயல்படவும் பல நல்மணிக் கருத்துக்கள் கட்டுரையினுள் புதைந்திருக்கின்றன.

'எழில்' எதிர்காலத்தில் ஈழத்தின் சிறந்த இலக்கிய இதழாக மலர வாய்ப்புண்டு! வாழ்க! 'எழில்'.

*    *    *

இராமன்
கற்றன்.

......'சிந்திக்க வேண்டுகிறோம்' என 'சீற்றி' தொகுத்தளிக்கும் விடயம் உண்மையில் ஒரு சிந்தனைக் கருவூலமாக, சிந்தனைச் செல்வமாகவே இருக்கின்றது.

# அவளுக்குத் திருமணமாம்........

கொழும்பில் இருந்து வந்ததும் எனக்குக் கிடைத்த முதற் செய்தி "அவளுக்குத் திருமணமாம்......" என் தங்கைதான் கூறினாள். எனக்கும் அவளுக்கும் இந்த உறவு இடையில் ஏற்பட்டதுதான் என்றாலும் மிகவும் குறுகிய காலத்தில் நாம் காதலர்களாகிவிட்டோம் என்பது என் பெற்றோர்களுக்குத் தெரியாவிட்டாலும் எப்படியோ என் தங்கைக்குத் தெரிந்திருந்தது. அதனால்தான் நான் வந்ததும் வராததுமாய் என் காதுகளில் போட்டுவிட்டாள். அவள் கொஞ்சம் வேதனையுடன்தான் கூறினாள். ஆனால் எனக்கு ... இருதயத் துடிப்பு நிற்காத ஒரு குறை. இப்படியும் பெண்கள் வாழ்கிறார்களா?

அதிர்ச்சியை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

என் உடலிலிருந்த உணர்வுகள் எல்லாம் மறைந்துபோய் பாரமில்லாத ஒரு பொருள் மண்ணிலே ஊர்வதுபோன்ற பிரமை. ஆனால் நெஞ்சுக்குள் மட்டும் பாரமான இரும்புத்துண்டுகள் கிடந்து சுழல்வதுபோல், மனதில் ஒரு விசித்திரமான பாரமும் குமைஞ்சலும், பரபரப்புமாயிருந்தது.

நான் செயலற்று இருந்தாலும் என் கடிகாரம் ஓடிக்கொண்டுதான் இருந்தது.

மாலை 5 மணி—

நான் என்ன செய்கிறேன் எதைப் பேசுகிறேன் என்ற எதுவித உணர்வுமின்றி அந்தப் புதுமையான மனப்பாரத்துடன் யாழ்ப்பாணக் கோட்டையைக் கடந்து பண்ணைக் கடற்கரை ஓரமாக நடந்துகொண்டிருந்தேன்.

அப்பொழுது என் கண்ணில் பட்ட அந்தக் காட்சி—

ஒரு இள நங்கையும் ஆடவனும் மிக ஒட்டினாற்போல் அமர்ந்திருந்தனர். அவர்களது கரங்கள் ஒன்றோடொன்றிணைந்து தமக்குத் தெரிந்த மொழியில் பேசி அந்த இளம் காதலர்களுக்கு இன்ப மயக்கத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. அவர்களுக்கு அண்மையில் மற்றுமோர் பெண் அமர்ந்திருந்தாள். ஆனால் அவள் பார்வை மட்டும் வேறு திசையில் இருந்தது.

மாயக் கண்ணன்

அந்தக் காட்சியில் லயித்து விட்ட என் கண்கள் அகல மறுத்தன.

மனதில் உள்ள பாரம் குறைந்து என் உடல் உணர்வுகளும் இயக்கத்தொடங்கின.

அதேகாட்சி—

நானும் அவளும் காதலர்களாகி தனிமையில் சந்தித்து எமது எண்ணங்களைப் பரிமாறிக் கொண்ட முதல் அனுபவம் என் மனத்திரையில் படமாக விழுந்தது.

கதிரவன் மறைந்தும் மறையாமல் காதலர்களுக்கென பிரத்தியேகமாக அளிக்கும் மங்கிய ஒளிப்பிரவாகத்தில், நானும் அவளும் முத்தமிட்டுக் கூத்தாடும் அலைகளைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தோம். அவள் தோழியும் எமக்கருகேதான் இருந்தாள். எனினும் எமக்கு ஒத்தாசை புரிவதுபோல் வேறு திசையில் பார்த்தவண்ணமே அவள் பேசினுள்.

"என்ன! இன்றுதான் முதல் முதல் சந்திப்பதுபோல் இருவரும் பேசாதிருக்கிறீர்கள்?"

உண்மைதான், அவள் குடும்பத்திற்கும் எங்களுக்கும் உறவு ஏற்பட்டு எட்டு மாதங்களுக்கு மேலாகின்றது. அவர்கள் எங்கள் வீட்டிற்கு வருவதும் நாங்கள் அங்கு போவதும் வெகு சாதாரணமாகிவிட்டது. நான் தனித்து பலதடவை அவள் வீட்டிற்குப் போயிருக்கிறேன். அவளுடன் பேசிப்பழகியிருக்கிறேன். அவள்பரிமாற நான் உணவு அருந்திய நிலையில்கூட எனக் கேற்படாத புதிய உணர்வு—உள்ளமும் உடலும் ஒருமித்துப் புல்லரிக்கும் இன்பநிலை—மனதில் உள்ளதை வார்த்தையில் வடிக்கமுடியாத மயக்கம் இந்த அமைதியான சூழ்நிலையில் என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் அவள் செக்கச் சிவந்த அழகியல்ல — படிப்போ, பணமோ, நாகரிகமோ எதுவுமே அதிகமில்லாத ஒரு சாதாரண பெண். இருந்தும் அவள் என்னைத் தன்பால் ஈர்த்துவிட்டாள் என்றுல் காரணம்—

அவள் வாழ்க்கையில் நடந்து விட்ட ஒரு துயரச் சூறுவளி—தன் உள்ளத்திற்கு அடக்கத்தை உரமாகப் போட்டு வளர்த்து வரும் மனப்பக்குவம்—

—அன்று,

வழமைபோல் கொழும்பால் வந்ததும் அவள் வீட்டிற்குச் சென்றேன். வீட்டில் யாருமே இருக்கவில்லை. அவளும் அவள் தங்கையுமே என்னை வரவேற்றுர்கள். சிறிதுநேரத்தில் அவள் தங்கை எம்மைத் தனிய விட்டு விட்டு சமயலறைக்குள் சென்று விட்டாள். எமது பேச்சுத் தொடர்ந்தது. புதினங்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டோம். இடையே உறவினர்களின் கலியாணப் பிரச்சினைகள் பேச்சுக்கள் எம்மிடையே எழுந்தன.

"கேட்க மறந்துவிட்டேன்; உங்களுக்குக் கலியாணமெப்போ?"

அவள் எதிர்யாராதவண்ணம் இந்தக் கேள்வியை அவளிடம் கேட்டேன்.

திராவகங்கள் கலந்ததும் ஏற்படும் திடீர் மாற்றம்போல் அவள் முகத்தில் புதிய மாற்றம் ஒன்று தோன்றியது: பதில் சொல்லத் தயங்கினுள்.

"ஏன் நான் அறியக்கூடாதா?"

என் கேள்விக்கு அவள் சிரித்தாள். கலைவாணர் கிருஸ்ணன் 'சிரிப்பு' என்ற பாடலில் பல வகையான சிறப்புகளையும் பாடியிருக்கிருர். ஆனுல் அவள் சிரித்த சிரிப்பு அவர் பாடாத ஒரு துயரச் சிரிப்பு.

"எனக்கும் கலியாணமா ?"

"ஏன்!"

" அது நடந்து முடிந்துவிட்டதே"

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் இனிமையான குரல் கரகரத்தது. என் உள்ளத்திலும் ஒருவித ஏக்கம்; அவள் வாழ்க்கையில் ஒரு பெரும் அதிர்ச்சியைத் தாங்கியிருக்கிருள். அதை அறியவேண்டும் என்ற ஆவலும் என் உள்ளத்தே உதித்தது.

" என்ன ! ஒருமாதிரியாக மனம் வெறுத்துப்பேசுகிறீர்கள்; அப்படி என்ன உங்களுக்கு நடந்துவிட்டது?"

"என்னிடம் அழகில்லை — படிப்பில்லை— பணமில்லை—நான் எப்படி வாழ்க்கை நடத்துவது." வேதனையின் விளிம்பில் இருந்து வெளிவந்தன அவள் வார்த்தைகள்.


உங்களை மகிழ்விக்க
கிறீன் பீல்ட்
விளையாட்டுக் கழகம்
அளிக்கும்

**வினேத உடைப் போட்டி**

காலம்: 3-1-1971
இடம் : கடலணை மைதானம்


"அப்படி யார் கூறியது ?"

"நான் பக்குவம் அடைந்த நாள் தொட்டு 10 வருடமாய் என்னைத்தான் தன் மகனுக்கு கலியாணம் செய்துவைக்கப்போகிறேன் என்று ஊர் முழுவதும் சொல்லிவந்த என் மாமாதான்"

"ஏன் !"

"இன்று அவர் மகன் பெரிய உத்தியோகமாகிவிட்டாராம் — சீதனமில்லாவிட்டாலும் அவருக்கு இங்கிலீஸ் தெரிஞ்ச நாகரீகமான சிவத்தப் பெண்தான் வேண்டுமாம்."

"கணவன் பார்த்துக்கொண்டிருக்க பக்கத்தில் இருப்பவனுடன் உடலோடு உடல் உராசியவண்ணம் கைகோர்த்து நடமாடவா அவருக்கு இங்கிலிஸ் தெரிந்த நாகரிகமான பெண் வேண்டுமாம்!"

என் கடுமையான இந்த வார்த்தைகளுக்கு அவர் பதில் பேசவில்லை. அவள் மௌனத்தில் என் மனதில் பதிந்திருந்த ஈழத் தமிழ் இளைஞன் ஒருவனின் வீரப்

பேச்சை அசைபோட்டுக்கொண்டேன்.

''தமிழ் பண்பாட்டிற்கு மூடு சாந்து இட்டு, நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகத்தை அடைய விரும்பும் ஆடவர்கள் அவர்களைப் பாவக்கடலில் விழுத்தும் சாத்தான்களாகப் புதிய உருவில், மல்லிகைப்பூ மணக்க வேண்டியகூந்தலில் அதைச் சுமக்கும் கூடையளவில் கொண்டையும், உடல் தெரியும் மெல்லிய ஆடையும், மண் தின்னும் உடலுக்கு வண்ணமும் பூசி கச்சேரிகளிலும்—பஸ்ராண்டிலும் — படமாளிகைகளிலும் ஆட்டமாடிக்கொண்டு, தேனினுமினிய தமிழ்த்தாயை மறந்து, அன்னிய வார்த்தையை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பேசி அகப்பட்டவர்களுடன் எல்லாம் உண்டு உலாவி உடலை வளர்த்து வருபவர்கள்தான் இன்று எங்கள் தமிழ்த் தாயைக் கொல்லத் துடிக்கும் முதல் விரோதிகள். இன்று தமிழ் காக்க—அவள் மொழி வளர்க்க—தெய்வீக சக்தி வாய்ந்த அவள் கலாச்சாரம் ஓங்கிவளர முயலும் இளைஞர்கள், அநீதியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்கள் முதல் இந்த அநாகரிக விரோதிகளைத் தண்டிக்கவேண்டும்.''

என்றும் என் உள்ளத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தித் தமிழ்த் தாயின் நல்ல பண்பாட்டின் விரோதிகளைக் கண்டால் காறி உமிழும் உணர்ச்சி வெறி குமுறி எழுந்தது.

''மாமன் மாமியை மதிக்காத மருமகளாக, கணவன் பார்த்துக்கொண்டிருக்க அடுத்தவனுடன் கைகோர்த்து சல்லாபிக்கும் மருமகளா அவருக்கு வேண்டுமாம் ..''

திரும்பவும் ஒருவித அதட்டல் தொனியுடன் அவளிடம் கேட்டேன்.

''எனக்குப் பல இடங்களிலிருந்து கலியாணம்பேசி வந்தார்கள். எனது வேறு சொந்த மைத்துனர்கள் அம்மாவிடம் விடாப்பிடியாகக் கேட்டார்கள். மாமாவின் பேச்சை நம்பி அம்மா அவர்களுக்கு மறுப்புக் கூறினாள். கடைசியில் மாமா எங்களை ஏமாற்றிவிட்டார். 'யாருக்கும் நான் பொருத்தமில்லாத புத்தியற்றவள்' என்று அவர் கூறிய கடைசி வார்த்தையோடு என் வாழ்க்கையும் முடிந்துவிட்டது.''

அவள் கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீர் நிலத்தில் விழுந்து சிதறி என் கால் பாதங்களிலும் பட்டது. அந்த வினாடியே நான் என்னிடமிருந்து எதையோ இழப்பது போன்ற பிரமை.

பல நிமிடங்கள் கடந்தும் அவள் தலை நிமிரவேயில்லை. என்னால் முடிந்தளவு ஆறுதல் வார்த்தைகள் கூறினேன். ஆயினும் அவள் ஆறுதல் கொள்ளவில்லை; அழுகுரல்தான் கேட்டது.

''நான் அழகில்லாதவள்; எனக்கேன் வாழ்வு ... ''

அவள் வார்த்தைகள் என் உள்ளத்தைச் சுட்டெரித்தன.

என்னை அறியாமலே அவளுக்கு மிக அருகே எழுந்து சென்றேன். என் சுட்டுவிரலால் அவள் நாடியைத் தொட்டு மெல்ல அவள் தலையைநிமிர்த்தினேன். அந்நேரம் ஒரு மென்மையான இன்ப உணர்ச்சி என் உடலெல்லாம் ஊடுருவதுபோல் பாய்ந்தது அவள் என்னைப்பார்த்த பார்வை நீண்ட நாட்களாக என்னிடம் எதையோ தேடுவது போல் இருந்தது.

"அப்படி என்ன! உங்களுக்கு ஒரு வாழ்க்கையை ஆண்டவன் அருளாமலா விடப்போகிறான்" என்று கூறிக்கொண்டே அவள் பார்வையிலிருந்து நான் என்னை விடுவிக்க முயன்றாலும் அவளிடம் எனக்கு இதுவரை ஏற்படாத அன்பு, ஏதோ ஒருவித சக்தியால் அவள் என்னை இழுப்பதுபோன்ற ஒரு நிலையை நான் உணராமலில்லை. அடுத்த நாளே நான் வியாபாரவிஷயமாக கொழும்பிற்குச் சென்றுவிட்டேன். அங்கும் எனக்கு அவள் நினைவுதான்.

ஆறுதல் கூறி ஒரு கடிதம் எழுதினேன். அன்றிலிருந்தே எம்மிருவருக்குமிடையே கடிதத் தொடர்பு ஆரம்பமாயிற்று. சாதாரணமான கடிதங்களாக இருந்தாலும் ஏனோ அவள் கையெழுத்தைக் காணும்போதெல்லாம் ஒருவித மகிழ்வால் உடல் எல்லாம் சிலிர்க்கத்தான் செய்தது. நாட்கள் நகர்ந்தன. கடிதத்தில் வரும் வார்த்தைகளும் நாளுக்குநாள் மாறிக் கொண்டே வந்தன.

போயா தினத்திற்கு அடுத்த நாள் அவள் கடிதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த எனக்கு ஏமாற்றமின்றி அவள் கடிதம் கிடைத்தது. ஆவலோடு பிரித்துப் படித்தேன். ஒருமுறையல்ல ஓராயிரமுறை படித்திருப்பேன். அவளிடமிருந்து அப்படி ஒரு கடிதத்தை நான் எதிர்பாததுதான் என்றாலும், அவள் அழகாகக் கையாண்ட வார்த்தைகள் என்னை இன்ப வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்தன.

அன்புள்ளம் கொண்டவருக்கு,

இனிமேலும் நான் என் உள்ளத்தை மறைக்க விரும்பவில்லை. கொழும்பால் நீங்கள் வந்ததும் உங்களைத் தனிமையில் (கடற்கரையில்) சந்திக்க விரும்புகிறேன். அன்றுஎன்மன ஆசைகளை உங்கள் பாதத்தில் சமர்ப்பிக்கப்போகிறேன்.

இங்ஙனம்
உங்கள் அன்பை
மறவாத உள்ளம்.

"கொழும்பால் நீங்கள் வந்ததும் உங்களைச் சந்தித்து எல்லாம் சொல்லிவிடவேண்டும் என்று துடித்துவிட்டு இப்படியே பேசாமலிருந்தால்......"

அவள் தோழிதான் மீண்டும் எம் மௌனத்தைக் கலைத்தாள்.

என் பாக்கெட்டில் இருந்த அவளின் அன்புக் கடிதத்தை மெல்ல வெளியே எடுத்து.

"இதோ நீர் அன்புள்ளம் கொண்டவருக்கு எழுதிய கடிதும். என்னிடம் என்ன சமர்ப்

(தொடர்ச்சி 34)

# தமிழரசி

நாடகம் — முல்லைநாதன்

**காட்சி: நாலு.**

**இடம்: யாழ்புரி அரசன் மாளிகை.**

**அரசன், அமைச்சர், தளபதி, மற்றும் பணியாட்கள், தமிழரசி.**

**அரசன்:** "தளபதியாரே! சிங்கபுரி அரசன் சாம்பிராச்சிய சக்கரவர்த்தி படைப்பலம் கூடியவன். தீபபுரி அரசன் அவன் பக்கமுள்ளதாக ஓலை அனுப்பியுள்ளான். அன்றியும் போரில் திறமையுடையவன் இளவரசன் பார்த்தீபன். இதனைச் சிந்திக்காமல் ஆத்திரத்தில் அறிவை இழந்துவிட்டோமே?"

**அமைச்சர்:** "ஆமாம் தளபதியாரே! நாட்டிற்கு நன்மை செய்யும் உமது பரந்த நோக்கத்தை நாங்கள் பாராட்டுகிறோம். நம்மில் பலங்கொண்ட அளவில்தானே எதிர்க்கவேண்டும்?"

**தளபதி:** "அரசே! யாழ்புரியில் தளபதியாக இருந்த விக்கிரமசேனன் இருக்கும்வரை தாங்கள் எதற்கும் சிந்திக்கவேண்டியதில்லை! சிங்கபுரி மன்னன் படைப்பலம் கொண்டவன்! அவனின் மகன் போர்த்திறனுடையவன்! இவைகளைப் பார்க்கத்தான் நமது கரங்கள் துடித்துக்கொண்டிருக்கிறது! சக்கரவர்த்தியாம் அந்த வீரச்சேனன் மக்களை மாக்களாக மதிக்கும் மந்திரி! அதன்குட்டி அவன் மகன்! தத்தித்திரியும் தவளை, புத்திகெட்ட புலிக்குட்டி, இவர்களுக்குப் பயமுண்டா அரசே? விடை கொடுங்கள் போருக்கு! முதலில் அந்தத் தீபநாட்டுச் சிற்றரசனைச் சிறைப்படுத்தி உங்கள் காலடியில் சரண்புக வைக்கிறேன்! வெற்றிக்களிப்புடன் அரண்மனையில் காலடி வைக்கிறேன். அல்லது வேதனைச் சிந்துடன் போர்க்களத்தில் மடிகிறேன்!"

அரசன்: "ஆத்திரப்பட வேண்டாம் தளபதியாரே! உமது முடிவை நான் ஏற்றுக்கொண்டேன். அந்தச் சிங்கபுரி அரச னுக்கு நல்லபாடம் படிப்பிக்க வேண்டும்."

தமிழரசி: "அப்பா! அவசரத்தில் அறிவை இழந்துவிடவேண் டாம். சிந்தித்து முடிவிற்கு வாருங்கள்."

தளபதி: "அரசியலில் அனுபவமில்லாதவர்கள் இதில் தலையிடு வதை நான் விரும்பவில்லை!"

தமிழரசி: "அனுபவமுடையவர்கள்தான் அவசரத்தில் அறிவை யிழந்து ஆத்திரப்படுவார்கள். காப்பாற்றுவேன் கண்ணே, கலங்காதே பெண்ணே என்று காதல்நாடகம் நடிப்பவர்கள் போல் பேசுவதற்கு இதுவல்ல வேளை. போர்க்களத்தில் ஒப் பாரி வைப்பதை நான் விரும்பவில்லை!"

அமைச்சர்: "இளவரசி! தாங்கள் இதில் தலையிடுவது நன்றல்ல!"

அரசர்: "ஆமாம்!"

தமிழசி: சரியப்பா உங்கள் விருப்பம். (புன்சிரிப்புடன் இளவரசி போய்விடுகிருள்)

தூதுவன்: "வேந்தே! சிங்கபுரியிலிருந்து தூதுவன் வந்திருக் கிருன்!"

அரசன்: "வரச்சொல்!" (தூதுவன் வந்து ஓலையைக் கொடுக் கிருன் அதை வேண்டி அரசர் படிக்கிருர்)

அரசன்: தளபதியாரே! இதைப்படியும். (தளபதி ஓலையைப் படிக் கிருன் படித்தபின்)

தழுதிப: "மகாராச! வேண்டியதைச் செய்யத் தாங்களிருக்கிறீர் கள். வெற்றியோடுவர நான் இருக்கிறேன். போருக்குத் தயார் என்று அந்தப் புல்லன் அறியும்படி கூறிவிடுங்கள்!"

ஒற்றன்: "வேந்தே! நான் போகவிடை கொடுங்கள்?"

அரசன்: "நீங்கள் விரும்பிய நேரம் நாங்கள் போருக்குத்தயார் என்பதை அறிவித்துவிடு!"

ஒற்றன்: "உத்தரவு."

திரை

காட்சி : ஐந்து
இடம் : சிங்கபுரி அரண்மனை

**அரசனும், அமைச்சரும் — (அரசன் உலாவிக்கொண்டு)**

அரசன் : "அமைச்சரே! கப்பம்கட்ட மறுத்து போருக்குத் துணிந்துவிட்டான் அந்தப் பொடிப்பயல்! இனித் தயங்குவதில் பயனில்லை. இப்பொழுதே ஏற்பாடு செய்யும். தீபபுரிக்கு நான் போகவேண்டும். சிற்றரசன் நெடுமாறனிடம் தெரிவித்து அவனுடைய படைகளையும் அழைத்து வரவேண்டும். அந்த மதிகெட்டவன் மண்டையைச் சுக்குநூறாகப் பிளக்கவேண்டும்! அவனுடைய பிணங்கள் மலைமலையாகக் குவிவதை நான் பார்த்து மகிழவேண்டும்!"

(அப்பொழுது பார்த்திபன் அங்கு வருகிறான்)

பார்த்திபன் : "அப்பா! இதற்காகவா தாங்கள் போகவேண்டும்? இதுவரையும் இந்தச் சிங்கபுரிமன்னன் வீரச்சேனன் சிற்றரசரிடம் சென்று படைகேட்டிலான் என்று சரித்திரம் சரித்திரமாய் எழுதலாமே! இனியா நீங்கள் போகவேண்டும்? அந்தச் சிறுநரியை அடக்குவதற்கு இத்தச் சிங்கமொன்று போதுமப்பா! அப்படியிருந்தும் உங்கள் ஆசையை நிறைவேற்ற வேண்டும். அதற்காக நானே தீபபுரிசென்று சிற்றரசன் நெடுமாறனையும், அவனது சேனைகளையும் அழைத்து வருகிறேன்; விடை தாருங்களப்பா"?

அமைசசர் : "ஆமாம் வேந்தே! சாம்பிராச்சிய அரசன் சிற்றரசனிடம் படைகேட்கச் சென்றாரென்றால் நாடு நகைக்கும். இளவரசர் அந்தப் பொறுப்பை ஏற்று நடத்துவதை நான் விரும்புகிறேன்."

அரசன் : "நல்லது பார்த்திபா! உனது வீரத் திறமையை இந்த உலகம் அறிந்திருக்கிறது. உன்போன்ற வீரனைப் பெற்றதற்கு நான் பெருமைப்படுகிறேன். உனது திறமையை அறியாது வீராப்புப் பேசுகிறான் அந்தச் சிற்றரசன் தர்மச்சேனன். அந்த உலுத்தனின் தலை உருளவேண்டும். இப்பொழுதே தீபபுரி செல்ல ஏற்பாடுசெய்!"

பார்த்திபன் : நல்லதப்பா! நாளைக்கே நாடு திரும்புவேன்: கப்பம் கட்டவேண்டும்; அல்லது நாட்டைவிட்டுக் கப்பலேற வேண்டும். நாடாளும் திறமை அந்த நயவஞ்சகனுக்கில்லை. குரங்கிற்குப் புத்திசொன்னால் கூட்டைப் பிய்த்தெறியுமாம்! அழிவுகாலம் அண்மையில் அந்த அறிவுகெட்டவனுக்கு! கோட்டான் கூவினால் குயிலாகிவிடுமென்று எண்ணுகிறான் அந்தப் புத்திகெட்டவன். அமைச்சரே! ஏற்பாடெல்லாம் முடியட்டும்.

(திரை தொடரும்)

சிறுகதை

மணிகரன்

# கடைசி நாள் மன்னிப்பு

அந்த ஊரில் எங்கும் ஒரே பரபரப்பு. ஒரு நாட்டின்—தேசத்தின் பிரதமர் "சாகக் கிடக்கிறார்" என்றால் கூட இவ்வளவு பரபரப்பு ஏற்படுமோ என்று எனக்குச் சந்தேகம். அந்தப் பரபரப்பிலும் ஒரு இனம் தெரியாத மகிழ்ச்சிரேகை ஓடுவதுபோன்ற பிரமை எனக்கு.

எனக்கு—

என் மனதில் இனம் புரியாத கவலை ஏமாற்ற உணர்ச்சி... சே! நான் கொஞ்சம் பிந்திவிட்டேன் போலும். இன்னும் கொஞ்சம் முன்பே போயிருந்தால், அவரைச் சந்தித்திருந்தால்; நானும் கொஞ்சம் வாங்கியிருப்பேன். நானும் மற்றவர்களைப் போல, பரபரப்பு அடையாது விட்டாலும், பரபரப்புள்ளவன் போன்ற உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்திருப்பேன்.

அவர் யார்?

நாட்டின் பிரதமரா? நாலும் தெரிந்தவரா?

இல்லை...இல்லை.

நாதியற்றுக் கிடந்து, நாலு பணத்தைச் சம்பாதித்து, நாலு பேருக்கு மத்தியில் பணத்தை வட்டிக்குக் கொடுத்து, வட்டிக்குக் கொடுத்த பணத்தை எதிர்பார்க்காது, மாத இறுதியில் வட்டிக்காசை எதிர்பார்க்கும்—திருவாளர் சவரிமுத்தர்.

சவரிமுத்தர்—

பணக்காரன்—பிச்சைக்காரன், முதலாளி — தொழிலாளி என்ற பேதம் பாராத நாணயஸ்தன்—நாணயமில்லாதவன் என்ற நாலு பேருக்குள் பிரித்து, நாணயத்துக்கு ஏற்றவாறு, கையெழுத்தோ— கைக்கீறலோ வாங்காது தன் பணத்தை அவர்களிடம் முடக்கி, மாதக் கடைசியில், வட்டிபெறும் கலை, அவருக்கு கைவந்த கலை.

சவரிமுத்துக்கு வட்டிக்காசும் அவ்வளவு பெரிசில்லை. மாதம் முடிந்தவுடனே, கடை கடையாக ஏறி, தனக்கு வந்துசேர வேண்டிய வட்டிக்காசை சதக் கணக்கில் பார்த்து, வசூலித்துவிட்டு, அவர் சிரிக்கும் சிரிப்பு, அது அவருக்கு ஒரு பெரிய கௌரவம் என்ற நினைப்பு.

இத்தனைக்கும் 'மனிதன்' நன்றாகச் சாப்பிடாது—உடுக்காது.

ஒரு முழத்துண்டை அரையில் இறுக்கிக் கட்டிக் கொண்டு,

கையிலே ஊன்றுவதற்கு தடி இல்லாதுவிடினும், தடியை ஊன்றிக்கொண்டு நடப்பது போல குனிந்து நடக்கும்பொழுது அவருடைய திறந்த பரந்த நெஞ்சை, தன் உழைத்து உரத்த இரு கைகளாலும் இரு தோள்களையும் இறுகப்பற்றிக்கொண்டு நடப்பார்.

எந்தப் பணம் தன்னை நாதியற்றவனாக்கி நடுத்தெருவில் விட்டதோ, அந்தப் பணத்தை தன் கைக்குள் அடைத்து வைத்திருக்க வேண்டும் என்ற வைராக்கியம்—சவரிமுத்துவுக்கு.

அவரிடம் வட்டிக்காசு பணம் பெற்றவர்கள் யாபேரும், அவருக்கு இறுதி மரியாதை செய்யும் நோக்குடன் அவர் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அது வீடா—

இயற்கைதரும் ஒளி முதலிய சாதனங்களை, செயற்கைச் சாதனங்களினால் தடுக்கக்கூடாது என்ற நினைப்பில் வேய்ந்தது போல—வீட்டின் கூரையில் ஆங்காங்கு சிறு சிறு ஜன்னல்கள். அவைகளுக்கூடாக தலைவைத்து உள்ளே வார்க்கும் ஒளிக்கதிர்கள்.

உள்ளே—

கிழிந்த பாய்த்துண்டு தான் அவருடைய படுக்கை. அவரை மூடியிருந்தது ஒரு பழைய சீலைத் துண்டு. அவர் தலையைத் தாங்கிருந்த தலையணை—

போத்தல் ஓடுகள் கொண்டு மூன்று நாளைக்கு வழித்தாலும் வைராக்கியத்துடன் எதிர்த்துப் போராடும் என்னைப் பிசான்.

வட்டிக்காக தரவேண்டியவர்கள் கடையில் வெற்றிலை போட்டால், வட்டிக்காசில் பிடித்து விடுவார்களே என்ற பயத்தில், வெற்றிலை போடும் பழக்கத்தையே நிறுத்திய சவரிமுத்தர்—தன் வருத்தத்தை மாற்ற டாக்டரையா கூப்பிடச் சொல்வார்?

அவர் வரையில் அந்தக்காய்ச்சல்—சுக்கு, கசாயம் குடித்தால் மாறும் காய்ச்சல்.

அவர் ஒரு லட்சத்துக்குப் பெருமதியாக இருந்தும், அவருடைய வாழ்வு கையேந்தி பிச்சையெடுக்கும் ஒரு பிச்சைக்காரனின் தினசரி வாழ்விலும் பார்க்க, மிகவும் கேவலமானது.

'சாப்பாடு இல்லாமல் செத்தாலும் சாகலாமே தவிர, ஒரு லட்சத்தை வைத்துவிட்டு செத்தான்' என்ற இறுமாப்புடன் சாகவேண்டும் என்ற நினைப்பு;

---

## அவளுக்குத் திரு ......

( 28ஆம் பக்கத் தொடர்ச்சி )

பிக்கப் போகிறீர்'' என்று கூறிக்கொண்டே அவள் நாணத்தைக் கண்டு ரசிப்பதற்காக அதை அவளிடம் கொடுத்தேன். அவளும் அதை வாங்கக் கையை நீட்டினாள்; அந்தக் கடிதத்தாளைப் பாலமாகக்கொண்டு இணைந்த கரங்கள் பிரியமுடியாமல் அப்படியே இன்பத்தில் லயித்துப்போய் நின்றன;

—அடுத்த இதழில் வளரும்

சவரிமுத்தர் மூச்சுப்பேச்சில்லாமல் கிடந்தார். அங்கே வந்தவர்களும் மௌனமாக நின்றனர்.

அங்கு நிலவிய மௌனத்தைக் காண என்னால் சகிக்க முடியவில்லை.

"என்ன அப்பு...எப்பிடிசுகம்" என்று ஏதோ கேட்க வேண்டும் போலிருந்தது, கேட்டேன்.

சவரிமுத்தர் கண்களை மெதுவாகத் திறந்தார். நான்கு பக்கமும் தன் கண்களை மெதுவாகச் சுழலவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன தம்பி—சுகம்! சாகிற நான்தானே. எனக்கு என்ன கவலை எண்டால்...", என்று சொல்லிக்கொண்டே ஒரு பெருமூச்சு விட்டார். அவர் முகத்தில் சிந்தனை ரேகைகள். "ஏன் சொல்லித்தொலைக்கவேண்டும்" என்ற விரக்தி மனப்பான்மையோ, என்னவோ?

"சொல்லு அப்பு. சொல்லு; சொன்னால் மனதிலை உள்ளபாரம் குறையும்" என்று அவரைச் சொல்லத் தூண்டினேன்.

அவர் தன் அடிவயிற்றில் இருந்துமூச்சை இழுத்துக் கொண்டே—"ஓம் தம்பி! அதுவும் சரிதான் இண்டைக்கு மாசக் கடைசி. முன்னைப்போலை என்னால் நடக்க முடியவில்லை. இந்தப் பாழாய்ப் போன காய்ச்சல் கொஞ்சம் தள்ளி வந்திருக்கக்கூடாதோ!"

பாவம்—சவரிமுத்தர்.

"அவருக்கு காய்ச்சல் கொஞ்சம் தள்ளிவந்திருந்தால், அவர் ஆசையாகக் கொஞ்ச பழவகைகளாயினும் சாப்பிட்டிருப்பார்" என நான் எண்ணியவாறு அவர் வாயிலிருந்தே அதைவரவழைக்க விரும்பி—

"ஏன் அப்பு" என்று கேட்டேன்.

"ஏனா? கொஞ்சம் தள்ளிவந்திருந்தால், இன்று வாங்கவேண்டிய வட்டிக்காசை வாங்கியிருக்கலாமே!" என்று சொல்லிவிட்டு, தன் ஒரே மழலைச் செல்வத்தை இழந்த தாயைப்போலப் பொருமினார்.

எனக்கு 'திக்'என்றது. மனித மனம் நுண்ணியது. அதன் நினைவின் அலைகளும் மிகவும் அற்பமானது. இறக்கும் தறுவாயிலும், சவரிமுத்தரின் அற்ப ஆசையை நினைத்தால்—

"என்ன அப்பு சொன்னியல்? நாங்களெல்லாரும் வட்டிக்காசு இஞ்சை கொண்டுவந்துதான் இருக்கிறம்!" என்று மற்றப் பெண்களையும் பார்த்துக் கொண்டு, அங்கு நின்ற பெண்களில் ஒருத்தி, தன் நேர்மையைப் பறைசாற்ற முயற்சித்தாள்.

"சீ! உது எனக்கு விருப்பமில்லை, நான் போய் வாங்கிறதுதான் எனக்குப் பெருமை" என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது "சுவாமி" வருகின்றார் என்று ஒருவர் சொன்னார்.

சவரிமுத்தர் அனலில் அகப்பட்ட புழுப்போலத் துடித்தார்.

அவர் ஒரு கிறிஸ்தவர், தான், என்று நாதியற்று தெருவில் கிடந்தாரோ—அன்றே கோவில்

கும்பிடுவதையும் விட்டுவிட்டு, பணத்தைச் சேகரிக்கத் தொடங்கினர்.

''சுவாமி, ஏன்''-அவர் சத்தம் போடத்தொடங்கினர்; சுவாமி சிரித்தார்.

அவருடைய சிரிப்பு அங்கிருந்த அத்தனை பேரையும் அன்புக் கடலில் ஆழ்த்தியது என்ருல், சவரிமுத்தரையும் சிறிது சல சலக்க வைத்துவிட்டது.

அந்தச் சிரிப்பு—

மனதைக் கவரக்கூடிய மழலைச் சிரிப்பு. அந்தச் சிரிப்பைக் கண்டவர்கள், முத்துக் குவியல்களைக் கண்டவர்கள் தான். அதைக் காண விரும்பாதவர்கள்-இயேசுவைக்கான விரும்பாதவர்களே! அது ஒரு தெய்வீகச் சிரிப்பு.

அலங்கோலமாக, அசிங்கமாகக் கிடக்கும் சவரிமுத்தரை—சுவாமி வந்ததன் பின்பு-இருப்பதைக் கொண்டே சீராக்க முயற்சித்தனர் அங்கிருந்த பெண்களில் சிலர்.

பரந்து கிடந்த அவர் நெஞ்சை தன் மிருதுவான கையினுல் தடவிக்கொடுத்தார் — சுவாமியார்.

அந்த ஸ்பரிசத்திலே சிலிப்படைந்தார் சவரிமுத்தர். இதுவரைகாணுத இன்பத்தை இன்று அவர் கண்டார்.

சவரிமுத்தர் இருமினுர். அவருடைய கடைவாயிலிருந்து இருமியதினுல் தொண்டையிலிருந்து புறப்பட்ட சளி, வழிந்துகொண்டிருந்தது. தன் கைக்குட்டையினுல் அவருடைய வாயைத் துடைத்து தொண்டையிலிருந்து அடிவயிறுவரை தடவிக் கொடுத்தார்.

''என்ன செய்கிறது, அப்பு?''

''சுவாமி! இப்ப எனக்கு என்ரைதேகம் கனக்கவில்லை. காத்திலே பறப்பது போலை இருக்கு; நல்ல சுகமாய் இருக்கு...''—வாய் வார்த்தைகளைப் பேச—கண்கள் நீரைச் சிந்தின. நீர்த்துளியை ஏந்தக் காத்திருக்கும் சிப்பிபோல உள்ளம் எதையோ ஏந்த, பரபரத்துக் கொண்டிருந்தது.

வார்த்தைகளுக்கும் — கண்ணீர்த் துளிகளுக்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் சுவாமியிடமிருந்து அந்தச் சிரிப்பே விடையாகக் கிடைத்தது.

சுவாமி சிரித்தார்.

''சுவாமி இன்னும் கொஞ்ச நேரத்திலை நான் செத்துப்போவேன். எனக்குக் கிடைப்பது நரகந்தான்''—சவரிமுத்தர் வாய் விட்டுக் குளறினுர்.

மனிதன்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று எண்ணும்போது ''சகலதும் தான் தான்'' என்று எண்ணி இறுமாப்பு அடைகிருன். அவனைச் சாவு நெருக்கும் பொழுது அவனைவிட்டு, அவன் சேகரித்த பணம்—படித்த கல்வி சகலதையும் மறந்து கடவுளையும், நரகம்—சொர்க்கம் ஆகியவற்றையும் சிந்தித்து, சிந்தித்து மாளுகிருன்.

''அப்பு ஏன் அழுகிறீர்கள். பிறந்தவன் ஒவ்வொருவனும் இறந்தே தீரவேண்டும். உங்களுக்கு இன்னும் காலங்கடந்து

போகவில்லை'' சுவாமி சொன்னார்.

''எப்படிச் சுவாமி?......நான் கோயிலுக்குப் போய் எத்தினையோ வருஷம்! நான் செய்த பாவங்கள்''—

சவரிமுத்து மனம் கலங்கத் தொடங்கினார்.

சவரிமுத்துவோடு சவரிமுத்தராகப் பழகிய சுவாமி தன்கடமையை நினைத்து தன்நிலைக்கு வந்தார்.

'அப்பு உங்களுக்கு இயேசுவில் நேசமா?'

''.... .........''

''ஓமோ, இல்லையோ'' என்று சொல்லுங்கோ......''

''என்ன சொன்னீர்கள் சாமி?''

''உங்களுக்கு யேசுவில் நேசமா?''

''ஓம்''

''கோயிலுக்குப் போனீர்களோ?''

''இல்லை''

''அப்பு, நீங்கள் இவ்வளவு காலமாகச் செய்த பாவ புண்ணியங்களை ஞாபகப்படுத்திப் பாருங்கள்!'

''சுவாமி எனக்கொண்டும் நினைவுக்கு வர இல்லை.

''அப்பு நீங்கள் இயேசுவை அவருடைய பிள்ளைகளை நிந்தித்ததுண்டா?''

''ஓம் சுவாமி! அதுக்காக இரண்டுநாள் மன்னிப்புக் கேட்கிறன்.''

''ஒருநல்ல கிறிஸ்தவனுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்தீர்களா?''

''இல்லைச் சுவாமி! இல்லை.''

'அதற்காக ஆண்டவனை மன்னிக்கும்படி வேண்டுங்கள்!''

சவரிமுத்து அழுதுகொண்டே ''எப்படிச்சாமி?'' என்றார்.

''நான் ஒரு நல்ல கிறிஸ்தவனுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை. அதற்காக பரமபிதாவே! என்னை மன்னியுங்கள்!''

சவரிமுத்து சொல்லத் தொடங்கினார். ''நான் நல்ல கிறிஸ்தவனுக்குரிய கடமைகளைச் செய்யவில்லை. பரமபிதாவே என்னை மன்னியுங்கள்.''

''எனக்கு மோட்சத்தில் இடம் தாருங்கள்!''

''எனக்கு மோட்சத்தில் இடம் தாருங்கள்!''

சுவாமிக்கு மனதிலே மகிழ்ச்சி. ''அப்பு இயேசுவினால் தரப்பட்ட இந்த அப்பத்தை அருந்துங்கள்.''

அப்பு தின்றார். சவரிமுத்தர் சொல்லத் தொடங்கினார்— ''சுவாமி இவ்வளவு காலமும் நான் பணம்பணம் என்று செத்துக்கொண்டிருந்தேன்; அந்தப் பணம் எனக்கு ஒண்டையுந்தரயில்லை. பணம் தராத சந்தோஷத்தை இண்டைக்கு நீங்கள் தந்தீர்கள்.''

சுவாமி சிரித்தார்.

பக்கத்தில் நின்ற பிள்ளை ஒன்றைக் கூப்பிட்டு ஒரு கடதாசியும் பென்சிலும் கொண்டுவரச் சொன்னார் சவரிமுத்தர். அங்கு கூடியிருந்த எல்லோர் மனதிலும் நடக்கக்கூடாதது நடக்கப் போகின்றதே என்ற பரபரப்பு;

கடதாசியும் பென்சிலும்வந் தன; "சுவாமி! எனக்காக நான் சொல்கிறதை எழுதுங்கோ" என்று சொல்லிக்கொண்டே அங்கே வந்தவர்களை ஒரு நோட்டம் விட்டார்.

எல்லோருடைய மனதிலும் ஒரு திகைப்பு; சவரிமுத்தர் மன நிலை ஒரு வெற்றிப் பெருமிதம். தனக்குப் பணம் தரவேண்டிய வர்களுடைய பெயர்கள் யாவற்றையும் விலாசத்துடனும் தொகையுடனும் சொல்லிக்கொண்டே போனார். அங்கே நின்ற வர்களுடைய முகங்கள் தொங்கின. என்னைச் சவரிமுத்து பார்த்தார். யோசித்தார்; பின்பு சிரித்தார்.

"என்ன பணம் வாங்க வந்த வர்தானே" என்ற சிரிப்போ என்னவோ!

"சுவாமி எனக்குச் சேரவேண்டிய சொத்து முழுவதும் கிறிஸ்தவர்களின் நன்மைக்கே செலவழியுங்கோ" என்று சொல்லி விட்டு தன்கைக்கீறலையிட்டு சுவாமியை சாட்சியாக இருக்கும் படி சொன்னார்.

"அப்பு நீங்கள் முன்பு படித்த பிரார்த்தனைகளை ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள்."

சுவாமியின் விருப்பத்திற்கிணங்க சவரிமுத்தரும் புரியாத பல வார்த்தைகளை அடிக்கடி உருப்போட்டுக் கையினால் குருசு போட்டார்.

இதயக்கோயிலில் இயேசுவை இறக்கும் தறுவாயில் இருத்திய சவரிமுத்துக்கு அர்த்தம் புரியாத வார்த்தைகளைக் கொண்ட பிரார்த்தனை தேவையா?

குருசு போட்ட கை தேய்கிறது. சுவாமியார் தன் கடமையைச் செய்யத் தொடங்கினார். அவருடைய முதலுக்காக முதலைக் கண்ணீர் வடிக்க வந்தவர்கள் அவருடைய கடைசி ஆசையினால் தாங்கள் கடனாளிகளானோமே என்று எண்ணி உண்மையில் நெஞ்சிற் குத்தி அழத் தொடங்கினர்.

"பாவங்களைச் செய்து பாவ மன்னிப்புப்பெற்று மீண்டும் பாவத்தைச் செய்துவருகின்ற வர்களிலும் பார்க்க பாவங்களைச் செய்துவிட்டு உண்மையில் மனம்வருந்திப் பாவமன்னிப்புப் பெற்று மீண்டும் பாவம் செய்யாதவர்களுக்கு பரமண்டலத்திலே கட்டாயம் இடம் கிடைக்கும்;

மீண்டும் பாவங்கள் செய்ய சவரிமுத்தருக்குக் காலமில்லை.

'கொஞ்சநேரம் பிந்திவிட்டேன்' என்று அங்கலாய்த்தேன். இப்பொழுது எதுவித பரபரப்பு மில்லாது சவரிமுத்தருக்காக அவர் இறக்கும்தறுவாயில்தானும் மனிதன்தான் என்று காட்டியதற்காக என் இறுதி மரியாதையை இரு கண்ணீர்த்துளிகளாகக் காட்டலானேன்.

—நன்றி ஈழநாடு.



# கண்டேன்

1. காரிருளில் வானிலொளித்
தாரகையைக் கண்டேன்;
பாரிலொளி தந்தவனைப்
பாழிருளிற் கண்டேன்.

2. பூவுலகந் தந்தவனைப்
புன்குடிலிற் கண்டேன்;
வாடைகுளி ரின்நடுவில்
வாடுவதைக் கண்டேன்.

3. புல்லணையிற் கன்னிமரி
பொன்மகனைக் கண்டேன்;
தொல்பவத்தை நீக்கவந்த
துய்யவனைக் கண்டேன்.

4. ஏழைகளின் நோவுதுயர்
இன்னல்களைத் தீர்க்க
ஏழையெனத் தான்பிறந்த
ஏந்தலினைக் கண்டேன்.

5. அன்புருவைத் துன்புறுவோர்
ஆறுதலைக் கண்டேன்;
மன்பதையின் மாபரனை
மண்ணுலகிற் கண்டேன்,

எம்வி.

# மாவிட்டபுரத்திலா முருகனை வணங்கப்போகிறீர்கள்?

(சி. அம்பலவாணர், புங்குடுதீவு)

[முன் தொடர்ச்சி]

கடந்த இரு வாரங்களுக்கிடையில் கோவில் கதவடைப்பு வல்புரஆழ்வார் கோவிலிலும் நடந்துவிட்டது. என் செய்யலாம் நம்மவர்மனம் என்று தான் மாறுமோ.

வெறுப்பனவே செய்யும்
என் சிறுமையை நின் பெருமையினுல்
பொறுப்பவனே — தெய்வம்:-
—மாணிக்கவாசகர்

ஆகவே கோவிலுக்கு வெளியே நின்று கோவிலுக்குள் இன்னும் தெய்வம் இருக்கிறதென்று நம்பும் தெய்வங்களே என் போன்றவர்களின் நினைவில் நீங்கள்தான் தெய்வம்.

நம்மவரில் சிலர் சாதியின் பெயரால் தெய்வத்திற்குச் செய்யும் கொடுமைகள் கணக்கில் அடங்காது. தங்கக் கூண்டில் அடைத்து அமிர்தம் கொடுத்தால் சாதாரண கிளிகூடவிரும்பி உண்ணுது. அப்படி இருக்க இரும்புக் கூட்டுக்குள் வைத்து தெய்வத்தைச் சித்திரவதை செய்கின்றீர்களே! இது நியாயமா? தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்னும் ஆன்றோர் வாக்குப்பொய்யாகாது.

முடிபாக.

சாதியின் பெயரால் எந்த மனிதனையும் கோவிலுக்குள் வழிபாடு செய்யச் செல்வதற்குத் தடை செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் நம்முள் பிரிவினை வந்தே தீரும். சிறுபான்மையினருள் இன்னுமொரு சிறுபான்மையினரரை ஏற்படுத்தின் கோவிலுக்குள் கடவுளை வணங்கச்செல்வோர் பொலிசாரும் இராணுவத்தினருமாய்த்தானிருப்பார்கள். சாதாரண மனிதர்கள் விக்கிரக வணக்கத்தை மறந்துவிடலாம்.

ஆவுரித்துத் தின்றுளரும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

என்பதல்லவா நம் கடவுள் கொள்கை.

"மருள் நீங்கட்டும்"

மரத்தை மறைத்தது
மாமத யானை
மரத்துள் மறைந்தது
மாமத யானை
பரத்தை மறைத்தது
பார்முதல் பூதம்
பரத்துள் மறைந்தது
பார்முதல் பூதம்

புறப்பொருளைக்கண்டு மயங்காதீர்கள் அகப்பொருளைக் காணுங்கள். பிரபஞ்சத்தையே தெய்வமாகக் கண்டவன் சைவன்.

புல்லாகிப் பூவாய் புழுவாய் மரமாகி பல்மிருகமாகிப் பறைவையாய் பாம்பாகி செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்த எமக்குஇன்னும்மருள் நீங்காதா? தொடரலாம்.

அல்லது இதற்கான இயக்கத்திற்கு தலைமைதாங்கி என் ஆவியையே அர்ப்பணிக்கலாம்.

சுபம்.

பத்துப் பிள்ளைகளை மொத்தமாக அள்ளிக்கொடுத்த ஆண்டவன் மரியசீலியிடம் கொடிய வறுமையையும் சேர்த்துக் கொடுத்துவிட்டான்.

வேறு சுமையொன்றும் அவளுக்காகக் காத்திருந்தது. அந்தச் சுமையையும் அவளாகத்தான் ஏற்க முன்வந்தாள். ............ஏன் ?

# மண் குடிசை

சுவாமி தேவநேசன் சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டார். பழுதடைந்த தன் பழைய காரைப் பழுதுபார்த்துவிட்ட மகிழ்ச்சி அவர் முகத்தில் பிரதிபலித்தது. கூடமாட ஏதோ உதவிசெய்துவிட்ட களைப்பில் எதிரேயிருந்த நாற்காலியில் நானும் அமர்ந்துகொண்டேன். பகல் இரவு என்று பாராது அவரது முயற்சியையும் உழைப்பையும் கண்டு என் வாலிப உள்ளமே அதிர்ந்துபோயிற்று. இரவு 11 மணி தூக்கம் வேறு என் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. ஆயினும் அவர் விடுவதாய் இல்லை. என் பெற்றோர், சோதரர், உழைப்பு போன்ற பல விடயங்களைப்பற்றி யெல்லாம் வினவிக்கொண்டே போனார்.

'படார்..' என்ற சப்தம் எம்மைத் திடுக்கிடவைத்தது. அதிர்ந்துபோய்த் திரும்பினோம். சிறுவன் ரவிதான் தூங்கி வாங்கிலிருந்து கீழே விழுந்துவிட்டான். நாம் பேசிக்கொண்டிருந்ததில் அவனும் தூங்கப்போகாமல் விழித்துக் கொண்டிருந்தபடியால் அவனுக்கு இந்நிலை ஏற்பட்டுவிட்டது.

''ரவி! நீ இன்னும் படுக்கப் போகவில்லையா ?''

ரவி நித்திரைத் தூக்கத்துடன் கள்ளமில்லாத சிரிப்பொன்றை உதிர்த்தான்

''சரி நீ போய்ப் படு; புத்தியில்லாத பெடியனாய் இருக்கிறானே'' இப்படி அவர் கூறும் பொழுதே அந்தச் சிறுவன்மேல் அவர் கொண்டுள்ள தனி வாஞ்சையை என்னால் உணர முடிந்தது.

''நேரமாகிவிட்டது; நாங்களும் போய் படுத்துக்கொள்ள

— மாயக்கண்ணன் —

லாம்.'' சுவாமியார் தன்னுடைய அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார்.

''அண்ணன்! திருந்தாதி அடிக் கேக்க எழுப்பிவிடுங்க; காலமே பூசைக்கு உதவவேணும்.'' ரவி—அந்தச் சிறுவனைப் பார்க்கும் போது, சுவாமியார் அவனைப் பற்றி என்னிடம் அறிமுகப் படுத்தியது என் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றுவிட்டது:

'' சின்னப்பையன்; வயதும் கொஞ்சம். எதையும் தானே செய்யவேண்டும் என்ற ஆசை''...

''யேஸ் பாதர்; ரவியைப் பார்த்தாலே தெரியுது.''

''மொத்தம் பத்துப் பிள்ளைகள்; இவன் எட்டாவது பிள்ளை; இவனுக்குக் கீழே இன்னும் இரண்டு குழந்தைகள்...''

''ஏன் பாதர்! வளர்ந்த பிள்ளைகள் இருக்கிறார்களா?''

''மூத்த பையனுக்குப் 14 வயது இருக்கும், ஏதோ கராச்சில் வேலை பழகுறான். நாலைந்து பெண்பிள்ளைகள் வேறு இருக்கிறார்கள்.''

கடவுள் பிள்ளைச் செல்வத்தை அள்ளிக் கொடுத்துவிட்டு வறுமையையும் சேர்த்துக் கொடுத்துவிட்டாரே! ஒருதடவை ரவியின் முகத்தைப் பார்த்துக் கொள்கிறேன், அந்தச் சிறுவன் அமைதியாகத் தூங்குகிறான். அவன் சின்ன முகத்தில் அந்த ஏழைத்தாயின் புன்னகை முகம் நிழலுருவாகத் தெரிகிறது.

'' இவ்வளவு வறுமைக்குள்ளேயும் புருஷனுக்கும் பெண்சாதிக்குமிடையில் எந்தவிதமான கவலையோ சலசலப்போ மருந்துக்கும் கிடையாது. பெண்சாதி எதைக் கொடுத்தாலும், சொன்னாலும் புருஷனுக்குச் சரி; புருஷன் எதை உழைத்துக் கொடுத்தாலும் பெண்சாதிக்குச் சரி தான். இரண்டுபேரும் சேர்ந்து பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தான் ஞாயிறு பூசைக்கு வருவார்கள். வறுமையிலும் நல்ல பயபக்தியான குடும்பம்.''

''பாதர், ரவிக்கு நீங்கள் ஏதாவது சம்பளம் மாதிரிக் கொடுக்கிறீர்களா.''

''நோ, நோ சம்பளம் என்ற சொல்லே எடுக்கக்கூடாது. அதிலையும் ரவியட தாய் மரியசீலி என்ன சொன்னு தெரியுமா?... சுவாமி ரவியை உங்களுக்கு உதவியாகத்தான் விட்டிட்டுப் போறன்; பக்கத்திலைதான் பள்ளிக்கூடமும், உங்களோட இருந்து உங்களுக்குக் கூடமாட உதவிகளைச் செய்யட்டும்; கடவுளுக்குச் சித்தமெண்டால் அவனும் உங்களைப்போல வந்தால்...''

ரவியின் முகத்திலே தாயின் கருணையைப் பார்க்கலாம்போலிருக்கே பாதர்,''

''மாதம்மாதம் கோயிலுக்காக நெல்லோ அரிசியோ கொஞ்சமாவது முந்திக் கொண்டுவருவதும் அவங்கதான்.''

ஏழையின் வாழ்விலேதான் மகிழ்ச்சி பொங்கும் என்பதை

நிரூபிக்கத்தானே என்னவோ கிறிஸ்து ஏழையாகப் பிறந்தார். அப்படியாயின், அவர் ஏழையின் இல்லத்தில்தான் வாழ்கின்றாரா?

இப்படியே சிந்தனையில் உருண்டுகொண்டிருந்தேன். நடு இரவு கழிந்துவிட்ட நேரம். திடீரென கோவில்வளவினுள் ஒரு கார் வந்துபோகும் சப்தம் என் காதுகளில் தெட்டத் தெளிவாய் விழுகிறது. இந்நேரம் யார் வருகிறார்கள்? யாருக்கும் அவஸ்தையாயிருக்குமோ? ஆனால், வந்ததும் கார் திரும்பிவிட்டதே!... சிந்தனையில் உழன்றவண்ணமே தூங்கிவிட்டேன். கண்விழித்த போது சிறுவன் ரவியைப் படுக்கையில் காணவில்லை. கடிகாரத்தைப் பார்த்தேன், ஏழு மணி ஆகிவிட்டது. அப்பாடா! இப்படித் தூங்கிவிட்டேனே; பூசை காணவில்லையென்று சுவாமியார் குறைப்பட்டுக்கொள்ளப் போகிறாரே என்று பயந்தபடியே அவசரம்அவசரமாக காலைக் கடன்களை முடித்துக்கொண்டு புறப்பட்டு நான் வெளியே வரவும், பூசை முடிந்து மக்கள் திரும்பவும் சரியாக இருந்தது. கோவில் முகப்பின் கதவோரத்தில் ஒரு சிறு கூட்டம் சூழ்ந்துநின்று யாரிடம் எதையோ கேட்பதும், தமக்குள்ளே பேசுவதுமாய் இருந்தார்கள், அவர்கள் முகத்தில் அனுதாபச் சாயல் பிரதிபலித்தது. சிறிதுநேரத்தில் சுவாமியாரும் அவ்விடம் வந்துவிட்டார், இனிமேல் நானும் ஏன் தாமதிக்கவேண்டும்? சுவாமியாரைக் கண்டதும் கூட்டம் விலகிக்கொண்டது. அங்கே கூட்டத்தின் நடுவே ஒரு கிழவி; அதுவும் கண் தெரியாத குருட்டுக் கிழவி. அந்தக் கிழவியின் தோற்றம், உடை எல்லாம் அவள் ஒரு நடுத்தரமான குடும்பத்தில் இருந்துதான் வந்திருக்கிறாள் என்பதை அப்பட்டமாக நிரூபித்தது. அப்படியானால் இரவு அந்தக்கார் சுமந்து வந்தது..!

"என்ன ஆச்சி, யாரோட வந்தநீ?"

"உதார்பிள்ளை கேக்கிறது?"

"அது சுவாமியாச்சி."

"சுவாமியாரா? ஐயோ, சுவாமி! அதை ஏன் கேக்கிறீங்க; நான் பெத்த பிள்ளை..... "நெஞ்சைப் பிளந்து விடும் துயரொலியாய் வெளி வந்தது அவள் வார்த்தை.

"இடத்தைச் சொல்லு; நான் கூட்டிக்கொண்டுபோய் விட்டிட்டு கவனமாப் பாக்கச் சொல்லிப்போட்டு வாறன்."

"வேண்டாம் ராசா! அங்க ஒருத்தி இருக்கிறாள், எனக்கு வந்த மருமகள்; நாய் பூனையோட போய்ச் சீவிச்சாலும் சீவிக்கலாம்; அவளோட சீவிக்க ஏலாது."

கண் தெரியாத தன் மாமிக்கு அந்த மருமகள் செய்த அரிய சேவையின் விளைவுதான் இது என்று அனைவருக்கும் புரிந்துவிட்டது.

சுவாமியார் சிரித்துக் கொண்டே கேட்டார்: "மகனும்

உன்னைக் கவனிக்கிறதில்லையா ஆச்சி?"

"என்னைக் கொண்டுபோய் கிழவி மடத்தில் விடடாப்பா எண்டு கேட்டன்; தனக்கு அது மதிப்பில்லையாம்; அவனையும், அவன்ரை பொஞ்சாதியையும், ஊரார் குறை சொல்லுவின மாம் எண்டு கடத்திப்போட் டான் சுவாமி; அங்கினேக்க ஆசைக்கருமையா சீனி முறுக்கு வாங்கித் தாபிள்ளை எண்டு கேப் பன்; அது அவனுக்குப் பொறுக் காது. அவளின்ரை பேச்சைக் கேட்டு...எனக்கு...நான் பெத்த பிள்ளை...நேத்து...அடிச்சுக்கூடப் போட்டான் சுவாமி."

தொடர்ந்த முதிர்ந்த உதடுகள் வார்த்தைகளை வெளிக்கொண்டு வரவில்லை; குருட்டுக் கண்கள் தான் கலங்கிக் கண்ணீரைச் சொரிந்து கூடியிருந்த அனைவரது உள்ளங்களையும் உடைத்துவிட் டது. பத்திரிகை நிருபர்கள் மாதிரிப் பல மாதிரியாகவும் கேட்டு அந்த ஆச்சியின் இருப் பிடத்தை அறிந்துவிடலாம் என்று சுவாமியாரும் மற்றவர் களும் முயன்றுபார்த்தனர். வெறும் கண்ணீரைத்தான் பதி லாகத் தந்தாளே தவிர, தன் மகனையும் மருமகளையும் அவள் காட்டிக் கொடுக்கவில்லை.

"சுவாமி, நான் பெத்துவளத்த கடமைக்கு உபகாரமாக என் பிள்ளை இந்தக் கண் தெரியாத பாவிக்கு அடிச்சிட்டான்; இனி அவனோடை எனக்கென்ன சீவியம்; ராவோடராவாய் எங்கேயாவது கோயில் குளத்தில் கொண்டு போய் விடடா எண்டு நானுந் தான் சொன்னன்; இங்ககொண் டுவந்து விட்டிட்டான்; அவன் நல்லாய் இருக்கட்டும்."

"சரி, நீ கவலைப்படாதை; இரண்டு நாள் பொறுத்துக் கொள்; கிழவர் மடத்து மதருக் குக் கடிதம் போட்டு அங்க கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகி றன். சிஸ்றர்மார் கவனமாக உன்னைப் பார்ப்பார்கள். இந்த ஆச்சியை இரண்டு நாளைக்கு நீங் களும் கொஞ்சம் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்று கூடியிருந்தவர்களுக்கும் இரண்டு வார்த்தை கூறிவிட்டுச் சுவாமியார் தன்னுடைய கார் நிற்பாட்டும் இடத்தை நோக் கிச் சென்றுகொண்டிருந்தார்.

சாயந்தரம் சுவாமியாரும் நானும் அவருடைய அறையி னுள் ஓர் புதிய நாடகத்திற்கான பின் இசையை ஒலிப்பதிவு செய் துகொண்டிருந்தோம் இப்படி யான வேலைகள் என்றால் சிறுவன் ரவிக்கு நிரம்பப் பிடிக்கும். எங்க ளைச் சுற்றியே நின்று கொண் டிருப்பான். ஆனால், அவனைக் காணாதது எனக்குப் பெரும் ஆச்சரியமாய் இருந்தது.

"சுவாமி!" யாரோ ஒரு பெண்குரல்.

சுவாமியார் என்னைத் தொட ர்ந்து பதிவு செய்யும்படி கூறி விட்டு, குரலுக்குரியவரைக் காணச் சென்றுவிட்டார்.

"யார்! மரியசீலியா? ரவி யைப் பார்த்துப் போகவா?"

அப்படியானால் வந்திருப்பவர் ரவியின் அன்னை மரியசீலி; பத் துப் பிள்ளைகளின் ஏழைத்தாய். அவர்கள் சம்பாசனை என் காது களிலும் தெளிவாய் விழுகிறது.

"இல்லையுங்க சுவாமி; மத்தியானம் ரவி வீட்டுக்கே வந்திட்டான்."

"அங்கேயா வந்திட்டான்! ஏன், என்ன நடந்தது?"

"அவன் வந்துதான் சுவாமி அந்த ஆச்சியைப் பற்றிச் சொன்னுன்."

"....................................."

பாவம்! அந்த ஆச்சியின்ரை மேலில தண்ணிபட்டு கனநாள் போல இருக்கு."

"ம்... மனிசி பெத்தபிள்ளை அப்படியாய்ப் போயிற்று."

"சுவாமி! நீங்க ஒண்டும் நினைக்கக்கூடாது; மாட்டேன் எண்டும் சொல்லக்கூடாது..."

"எதுக்காக, என்னவிஷயம்?"

"நானே அந்த ஆச்சியை என் வீட்டுக்குக்கொண்டுபோய் வைச்சுப் பார்க்கலாம் எண்டு நினைச்சுத்தான் வந்தனுன். அவரும் சம்மதிச்சிட்டாருங்க சுவாமி."

"மரியசீலி, நீயே பத்துப் பிள்ளைகளோடே கஷ்டப்படுகிருய்; அதோட...."

"சுவாமி, நான் சின்னவளாய் இருக்கும்போதே அம்மா செத்திட்டா; தாயின்ரை அருமை தெரியாமல்தான் வளர்ந்தனுன். பெத்த தாய்க்கு, அதுவும் அவங்கட வயதுபோன காலத்தில அன்போட கவனிச்சால் அது பெரிய பாக்கியம். கடவுளும் அவங்களை ஆசீர்வதிப்பார். அப்பிடி ஒருபாக்கியம் கிடைக்கக் கடவுளை மண்டாட வேணும் எண்டு ஞானம் சுவாமி பிரசங்கத்தில சொன்னது எனக்கு இன்றும் நினைவாயிருக்கு. ஏதோ பத்தோடே பதினெண்டாய் காச்சிறதில கிள்ளிக் குடுத்து அந்த ஆச்சியைக் கவனமாப் பாத்துக்கொள்ளுவேன்.

சுவாமியார் மௌனமாகி விட்டார். அவர் எதைஎண்ணி அமைதியாய் இருந்தாரோ தெரியவில்லை. கிறிஸ்தவ அன்பின் பிரதிபலிப்பாய் எழுந்த அந்த ஏழைத் தாயின்குரல் என் காதுகளில் விழுந்து என்னை உணர்விழக்கச் செய்துவிட்டது. எல்லோரும் வந்து பார்த்துவிட்டு பரிதாபப்பட்டுப் போனுர்கள். ஆனல், சிறுவன் ரவி ஓடோடிச் சென்று தன் தாயை இங்கு அனுப்பி யிருக்கிருனே! அந்தச் சிறுவனின் கருணையுள்ளம் இப்படியாயின், அவனைப் பெற்றெடுத்த தாய் எப்படி இருப்பாள் என்பதை இந்தஏழைத்தாய் இப்போது நிரூபித்து விட்டாள். அப்படியாயின், மாட்டுக் குடிலில் பிறந்த யேசு நிச்சயமாக இந்த ஏழையின் மண் குடிசையில் மறைந்து வாழத்தான் வேண்டும். புனித மலர்களால் சூழப்பட்ட அந்த மண் குடிசையைப் பார்த்துவிட வேண்டும் என்ற அணையாத் தீ என் உள்ளத்தே பற்றிஎரிந்தது.

"சுவாமி, நான் மண்டாடின மண்டாட்டுத்தானுங்க இந்த ஆச்சியைக் கடவுள்இங்கு அனுப்பியிருக்கிருர். எனக்கிது சுமை எண்டு நீங்க நினைக்கக் கூடாது; மறுக்காமல்...."

இதற்குமேல் அவரால் எப்படி மறுப்புக் கூறமுடியும்? இரவோடிரவாக அவரால் பழுதுபார்க்கப்பட்ட அவருடைய பழைய கார் அந்த ஆச்சியையும் ஏற்றிக்கொண்டு இறைவன் மறைந்து வாழும் மண் குடிசையை நோக்கிப் பறந்து சென்றது.

# ஈழத்து இலக்கியம்

— சிவம் —

'எழில்' மே இதழில் ஈழத்து இலக்கியம்பற்றிச் 'சரவணையூர் சம்பந்தன்' எழுதியிருந்த கட்டுரை பற்றிச் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

அவரது கருத்துக்களிற் பல மிகச் சிறந்தவையாயும் உண்மையாகவும் இருந்தபோதிலும் வேறுசில கருத்துக்களை என்னால் ஏற்க முடியவில்லை.

## ஈழத்துச் சஞ்சிகைகள் :

ஈழத்தில் பத்திரிகைகள் பல தோன்றி மறைகின்றன என்பது உண்மையாக இருந்தபோதிலும் இன்று பல சிறந்த சஞ்சிகைகள் இலக்கிய சேவைசெய்கின்றனஎன்பது மறுக்கமுடியாத தொன்று. "என்ன இருந்தாலும் இந்தியப் பத்திரிகைபோல் வருமா?" என்று கேட்கும் பெரும்பான்மை மக்கள் தங்கள் உள்ளத்தைச் சற்று விசாலப் படுத்தும்போதுதான் ஈழத்தின் சிறந்த ஏடுகள் தொடர்ந்து வெளிவர முடியும்.

இந்தியாவுடன் ஈழத்தை ஒப்பிடக் கூடாது. ஈழத்து இலக்கியம் வளர்க்க ஒவ்வொருவரும் உதவ வேண்டும்.

## ஈழத்து எழுத்தாளர்கள் :

ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிக் கூறும்போது அவர்கள் தொகை சிறிதாக இருக்கிறது என்ற கூற்று உண்மையானது தான். ஆயின் தரமான எழுத்தாளர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை மறக்கலாகாது.

செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், எஸ். பொன்னுத்துரை. பா. பாலேஸ்வரி, எம். ஏ. ரஹ்மான் ஆகிய இன்னும் பலர் நம்மிடையே உள்ளனர்.

மேலும், சு. வெ., சொக்கன், வ. அ. இராசரத்தினம் ஆகிய பற்பல பழம்பெரும் எழுத்தாளர்கள் இடையே ஓர் அஞ்ஞாத வாசத்தின்பின் மீண்டுள்ளனர்.

இவர்களின் மத்தியில் ஒரு சிலர் 'முற்போக்கு' என்று கூறிக்கொண்டு கண்டதையும் எழுதி வைப்பதால் இவர்கள் பிரச்சினைக் குரியவர்களாகின்றனர். இருந்தாலும் நமது ஈழத்து இலக்கியத்தை இவர்கள் வளர்க்கிறார்கள்.

அடுத்து, எழுத்தாளர்களின் ஒற்றுமையும், இன எழுச்சியும் பற்றி ஆசிரியர் கூறியுள்ள அத்தனையும் சிந்திக்கவேண்டிய உண்மைகள்தான். ஈழத்தின் எழுத்தாளர்கள் அனைவரும் இதனை உணர்ந்து தமிழர் முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டியது அவசியம்.

ஆசிரியரின் கட்டுரை பற்றி நான் கூறிய கருத்துக்களிற் தவறிருப்பின் அவற்றைக் கட்டுரை ஆசிரியரும், வாசகரும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். ●

எண்ணம்

# மாணவன்

"மாணவன்!" இச்சொல் எவ்வளவு சாதாரணமாக நாவிலே தவழ்ந்தாலும் சற்று ஆழ்ந்து சிந்திக்கும்போது, இந்தச் சாதாரண மாணவன் தான், நாளை மக்களின் தலைவன் —வைத்தியன்—பொறியியல் நிபுணன்—அரசியல்வாதி—ஆசிரியன்—விவசாயி......

எல்லாமே இவன்தானென்றால் இன்று இவனுக்குக் கொடுக்கப்படவேண்டிய வசதிகள்—வாய்ப்புக்கள் எல்லாம் சமஉரிமையோடு, தகுதி, தராதரத்திற் கேற்றவாறு சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதமின்றிக் கொடுபடல் வேண்டும்.

ஆனால் இன்று இவன், தகுதியற்ற பார்வையில் தராதரமற்ற தேர்வில் சம உரிமையின்றி தனக்கு அநீதிவிளைத்துவிட்டதாக ஆத்திரத் தொனியுடன் ஆர்ப்பாட்டம் செய்கிறான்.

இவனது சொல்லும் செயலும் ஒருபுறமிருக்க,

"எவ்வித ஆர்ப்பாட்டங்களாலும் எம்மைப் பயமுறுத்த முடியாது" என்று உதவிக் கல்வி அமைச்சர் கூறியிருப்பதுதான் எமது மனதைப் புண்படுத்துகிறது.

அஃதாவது மாணவன் சாதாரணமானவன் என்றும் நாம் நினைப்பதுதான் சட்டம் என்றும் அவர் சுட்டிக்காட்டுவதுபோல் இருக்கிறது. எனவே சட்டம் போட்டு மாணவனை — எதிர்கால எழில் ததும்பும் ஈழத்தை மட்டப்படுத்தாமல், நாட்டின் தலைவர்கள்— அறிஞர்கள் — அரசியல்வாதிகள் ஒன்றுகூடிக் கூறும் பசப்பு நியாயங்களை விடுத்து அவனுக்கு நல்ல தீர்ப்பளித்து நாளைய ஈழத்தைக் காக்குமாறு வேண்டுகிறோம்.

— ஆசிரியர்

உங்கள் எல்லோருக்கும்

எங்கள் மனமார்ந்த

நத்தார் புதுவருட வந்தனம்

லீலா ஸ்ருடியோ

சிறந்த படப்பிடிப்பாளர்

80, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நத்தார் புதுவருட நன்னுளில்

இனிய கீதங்களைக் கேட்டு மகிழுங்கள்!

பழுதடைந்த வானெலியாயின்

நீடிய அனுபவமுள்ள

எம்மை நாடுங்கள்.

Shapphire Radio Technic

84, Main Street, JAFFNA.

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Edited and Published by M. Ariyanayagam, 156, Gintupity Street, Colombo—13,

Printed at St. Joseph's Catholic Press, Main Street, Jaffna,

எங்கள் வாடிக்கையாளர்கள்

நண்பர்கள், மற்றும் அனைவர்களுக்கும்

எமது உள்ளம் கனிந்த

*நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.*

**BHARAT STUDIO**

*Phone: 252*

*Photographers*

**Kasturiar Road, Jaffna**

---

எங்கள் வாடிக்கையாளர்கள்

நண்பர்கள் மற்றும் அனைவருக்கும்

எமது மகிழ்ச்சிகரமான

**கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்.**

**NORTHERN INDUSTRIES**

**8/1, Stanley Road,**

**JAFFNA.**

# றியோ சிட்டு

## படப்பிடிப்பாளர்கள்

15, மணிக்கூட்டுவீதி, — யாழ்ப்பாணம்.

- திருமண விழாக்கள்
- விளையாட்டு நிகழ்ச்சிகள்
- மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள்
- ஞாபகமிருக்கக்கூடிய வீட்டு நிகழ்ச்சிகள்

## என்றுமே ஞாபகமிருக்கப் புகைப்படம் எடுங்கள்.

முன் ஏற்பாடு செய்தால் நிகழ்ச்சிகளை நேரில் வந்து படம்பிடிப்பார்கள்.